# புதிய நிலா

*Puthiya Nila*

04

நாளைய சிற்பிகளிற்கான இன்றைய உளி

புரட்டாதி - 2010

சிறுகதைப் போட்டியில்
தேசிய மட்டத்தில் 2ம் இடம் பெற்ற
மேரிநிஷாந்தியுடனான பேட்டி



50/=

பிரதம ஆசிரியர். கு.அஜித்குமார்

வெளியீடு:- புதிய நிலா வெளியீட்டகம்
வதிரி கரவெட்டி.

புதிய நிலா நிலைக்க வாழ்த்துகிறோம்






# சுந்தர்சன்


யாழ்மண்ணில் நீண்ட காலமாக மக்களின் நன்மதிப்பை பெற்ற

இராஜமுத்திரை பதிக்கும் ஸ்தாபனம். மின் உபகரணங்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் நிறைந்த

பொருட்களை பெற்றுகொள்ளவும் மக்கள்

மனதில் நிலைத்து நிற்கும் ஸ்தாபனம் .


மானிப்பாய்

# புதிய நிலா

கல்விக் கலை இலக்கிய சமூக அறிவியல் சஞ்சிகை

இதழ் - 04


மகுட வாசகம் நாளைய சிற்பிகளிற்கான இன்றைய உளி

நோக்கம் :-மாணவர்களின் ஆற்றலை வளர்ப்பதும் வெளிப்படுத்துவதும்

தூர நோக்கு :- தமிழ் மாணவர்கள் மத்தியில் ஊருடுவலும் ஊக்குவித்தலும்


பிரதம ஆசிரியர்
கு. அஜித்குமார்
( Ceylinco Life PLC Nelliady)

இணை ஆசிரியர்
செ. கேதீசன்:-
Arts Faculty Student
( Univercity Of Jaffna)

நிர்வாக உறுப்பினர்கள்
கு. மைதிலி -Teacher
( English Medium)

வை. தியாகரன்
Arts Faculty Student
( University Of Jaffna)

ந. துவாரகா -
Arts Faculty Studet
( Unversity Of Jaffna)

பு. ஜெஸ்லி
Hindu College
A/L Student Colombo - 06

கௌரவ ஆசிரியர்
பண்டிதர் பொன் சுகந்தன்



தொடர்புகளிற்கு
கு. அஜித்குமார்
நிர்மலஸ்தான்
நல்லா தோலை
வதிரி கரவெட்டி.
தொலைபேசி 077 - 1944248
077 - 1944374
021 - 4908728

தொலைநகல் 021 - 2263210
Email puthiyanila@gmail.com


வங்கித் தொடர்புகளிற்கு
கு. அஜித்குமார்
கொமர்ஷல் வங்கி
நெல்லியடி
A.C - 8108007512

# நிலாவின் உள்ளே .......


01) கவிதைகள்

I புதுமைக்கு கோவில் சமைப்போம்
II செல்லிடத் தொலை பேசிகள்
III வாழ்வின் தத்துவங்கள்
IV தரணியே போற்றிடும் தாய் மொழி எம் தாய் மொழி.
V இமையூர் தாசனின் இரு கவிதைகள்
VI தவிப்பு

02) சிறுகதைகள்

I காலம் செய்த கோலம்
II கல்லறை நண்பர்கள்
III மனங்கள்

03) கட்டுரைகள்

I ஓசோன் படை தேய்வும் அதன் விளைவும்
II நான் விரும்பும் இலக்கிய நூல் கம்பராமாயணம்

04) மேரிநிஷாந்தினியுடனான பேட்டி

05) புலமை நிலவு

புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் பாகம் (I)

06) வழிகாட்டல் விருத்தி

I கா.பொ.த (சாதாரணதர) பகுதி
II கா.பொ.த (உயர்தர) பகுதி

07) தமிழ் அறிவு வினா விடை

08) போட்டிகள்

I பொது அறிவு போட்டி தொடர் 01
II தகவல் தொழில் நுட்ப போட்டி தொடர் 01


அட்டைப்படம் & உள் ஓவியம்
வி. உதயச்சந்திரன்

# "இதழோனின் இதழோசை"

2008ம் ஆண்டு தை மாதம் 16ஆம் திகதி சிந்தனையில் உருவானதே "புதிய நிலா" இதன் முதற்கட்ட வளர்ச்சியாக பொது அறிவினை மேம்படுத்தும் முகமாக பொது அறிவு போட்டியினை நடாத்தி பரிசில்களை வழங்கி வந்தோம். இச் செயற்பாடு மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று அடுத்த நிலைக்கு எம்மைத் தூண்டியது. இத் தூண்டலின் வெளிப்பாடாகவே "புதிய நிலா" கலை இலக்கிய சமூக அறிவியல் சஞ்சிகையாக வெளிவந்து இற்றைக்கு மூன்று இதழ்களை நாம் வெளியிட்டு இருந்தோம்.

எமக்கு பல சோதனைகள் வந்தாலும் அவற்றை சாதகமாக மாற்றி சாதனைகள் புரிந்து இதழ் நான்கை கல்விக் கலை இலக்கிய சமூக அறிவியல் சஞ்சிகையாக வெளியிட்டு மாணவர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று மாதம் ஒரு இதழாக யாழ் மண்ணில் வெளிவர உள்ளது.

இனிவரும் காலத்தில் பல்வேறுபட்ட புதிய பரிணாமங்களுடன் "புதிய நிலா" வெளிவரும் என்பதை நம்பிக்கையுடன் கூறி எமது இதழ் ஐந்தை நோக்கி நகருகின்றேன்.

"நோக்கத்தில் உறுதி செயலின் நம்பிக்கை"

பிரதமஆசிரியர்
கு.அஜித்குமார்

# முதுமைக்கு கோவில் சமைப்போம்

இவையும் முதியதே....
முக்கண் முதல்வன் அடிமுடி
மூலம் காணா இறையது முதியதே
சக்கரம் கொண்ட காக்கைநிற கண்ணன்
சமைத்த கீதை வையகத்தில் முதியதே
தக்கராய் மானிட மாணிலம் உய்ய
தந்த பையிள், குர்ரான் முதியதே
உக்கும் எலும்புடல் எண்ணா இறைபற்ற
உரைத்த உரை முற்றிலும் முதுமையே.

அறிவில் பெரியவர் அறிவிற்கு முதியவர்
அலைகொள் மனத்தை அலையா வடக்கி
உறியிட்ட பாத்திரமாய் முடக்கிய இளையவன்
உலகினில் ஐம்புலனை வெல்வதில் முதியவனே
கறிசோறு ஆக்கும் பக்குவம் கண்டார்
இளையவர் ஆகிலும் கலையில் முதியரே
அறியா மடமை போக்க வுலகில்
அறிந்த வாரியாரல் வறிவிற்கு முதியவரே.

இளமை பறிபோகில் அது முதுமையல்ல
இளமையில் பெற்ற அனுபவமே முதுமை
தளரும் வயது தளர்ந்தால் முதுமையா?
தன் நம்பிக்கை தனசேல்லவர் இளையரே
வளம்கொள் வாழ்வு இளமை இல் முதியரே
வனிதையர் சூழில் முதுமையங் கிளமையே
வளரும் துன்பம் படரா வாழ்வில்
வாழ்வின் இறுதிவரை சுட்டுவது இளமையே.

# செல்லிடத் தொலைபேசிகள்

செல்லிடத்
தொலைபேசிகள்
தொழில்
நுட்பத்தின்
சாபமா?அல்லது
மனிதனின்
அளவுக்கு மிஞ்சிய
ஆசையா....?

நித்தம் நித்தம்
தொடர்கின்ற
புதுக்கவிதைகள்
நிமிர முடியாமல்
சிக்கித் தவிக்கும்
செல்லிடப்
பாவனையாளர்கள்!

உன்னத உலகின்
உயிர்களிலெல்லாம்
தவழ்கிறது....
ஒன்றிரண்டு
செல்போன்கள்!
நான்கைந்து
சிம் காட்டுகள்!

செல்லிடத்
தொலை பேசிகளால்
தொல்லைகள்
தொடர்கதையாக
தொடர்ந்த வண்ணமே....

தினம் தினம்
அதிகரிக்கும் குற்றங்கள்
தொற்று நோயாக
பரவும்....
நீலப்படக் காட்சிகள்

சாக்கடைகளாக மாறும்
சமுதாயங்கள்!
சூழலியற் சீர்கேடுகள்....
......என
கணத்துக்கு கணம்
அரங்கேறுகிறது
செல்லிடத்தின்
சொல்லணாத் துன்பங்கள்

இக் கட்டான
நேரத்தின்
தொடர்புகளை
தொடர்புபடுத்த வேண்டிய
தொலைபேசிகள் இன்று
தொல்லை பேசிகளாக
உருவெடுத்து விட்டது.

**இ.சுமன்**
**வல்வை**

# வாழ்வின் தத்துவம்

சிரியுங்கள்
இந்த உலகம்
உங்களுடன் சிரிக்கிறது

அழுங்கள்
நீங்கள் மட்டுமே
அழுகிறீர்கள்!

பாடுங்கள்
அந்த மலைகளும்
பதிலளிக்கின்றன
பெருமூச்செறியுங்கள்
அவை காற்றினில்
காணாமல் போகின்றன!

கொண்டாடுங்கள்
உங்கள் வீட்டில்
ஓராயிரம் நண்பர்கள்
கவலைப்படுங்கள்
உங்கள் வீட்டில்
தூண்கள் கூட இல்லை

வாழ்வின் அமுதங்களை
எல்லோருடனும்
பங்கிட்டுக் கொள்ளலாம்
ஆனால்,
நம்மின் சோகங்களை
நாம் மட்டுமே விழுங்க வேண்டும்

வாழ்வின் வெற்றி
உங்களை வாழச் செய்கிறது,
ஆனால்,
அதன் தோல்வி
சாகடிப்பதில்லை
ஆழப்பதியும்
அறிவுரை வழங்குகிறது

இன்று வரும்
துயரங்களை கண்டு
ஓடி ஒளிந்தால்
நாளை
நம் முகவரி விவாரித்து வரும்
இன்பங்களை யார்
வரவேற்பது...?

நம்பிக்கை கொள்ளுங்கள்
அதுவே,
எல்லாவற்றையும் வெல்லும்
அருமருந்து

**உ.அனுரதன்**
யா/நெ.ம.ம.வி

## தரணியே போற்றிடும் தாய் மொழி எம் தமிழ் மொழி

தமிழ் மொழி எங்கள் தாய்மொழி
தமிழ் மொழி ஒரு தனிமொழி
தமிழ் மொழி எம் முதன் மொழி
தமிழ் மொழி ஓர் அழகிய மொழி
தமிழ் மொழி எங்கள் செம்மொழி
தமிழ் மொழி ஒரு இனியமொழி
தமிழர் பெருமைக்குச் சான்றான மொழி
தரணியே போற்றிடும் எங்கள் தாய்மொழி

இசையிலே இன்பம் கண்ட மொழி
எண் நுட்பங்கள் பல காணும் மொழி
ஓவியங்கள் கண்ட மொழி
காவியங்கள் பல காணுகின்ற மொழி
இயற்கை அன்னை அருளிய மொழி
இலக்கணங்கள் பல யாத்த மொழி
இனிய கருத்துக்கள் கொண்ட மொழி
என்றுமே குறைவில்லாத சிறப்பு மொழி

நினைத்தால் நெஞ்சினிக்கும் மொழி
சுவைத்தால் நாவினிக்கும் மொழி
கேட்டால் காதுவக்கும் மொழி
கேட்பவரைக் கொள்ளை கொள்ளும் மொழி
துடிப்பு மிக்க மொழி - நல்ல
சுகந்தரும் தேனான மொழி
தேனை நிகர்த்தினிக்கும் மொழி
அமிழ்தினிலும் இனிதான அருமை மொழி

உண்மை மிக்க நக்கீரனார் - நல்ல
உரை வகுத்த தமிழ் மொழி

ஊக்கமுள்ள வீரர் தம்மை
உருவாக்குகின்ற மொழி
வண்மை மிக்க பாண்டியன்
வளர்தெடுத்த செந்தமிழ் மொழி
பாராளும் மைந்தர் நாம் - என்றென்றும்
விழா எடுக்கும் நன்மொழி
பொதிகை மலையிலே தோன்றிய மொழி
தென்னன் புகழிலே கிடந்த மொழி
சங்கத் திருப்பிலே இருந்த மொழி
வைகை ஏட்டிலே தவழ்ந்த மொழி
முச்சங்கம் கண்ட மொழி
மும்மன்னர் மடியிலே நின்ற மொழி
பேதை நெருப்பிலே நின்ற மொழி
கற்றோர் நினைவிலே நடந்த மொழி

கம்பன் கவி பாடிய மொழி
சயங் கொண்டான் பரணி பாடிய மொழி
புகழேந்தி வெண்பா பாடிய மொழி
காடவன் கலம்பகம் பாடிய மொழி
ஒல்காப் புகழ் தொல்காப்பியன் இலக்கணம்யாத்தமொழி
ஔவையார் ஆத்திசூடி பாடிய மொழி
வள்ளுவன் குறளை வார்த்த மொழி
வாழ்விற்கு நல்ல வளஞ்சேர்த்த மொழி

தன் காலுக்கு சிலப்பதிகாரத்தை உடைய மொழி
தன்கைக்கு வளையாபதியை அணிந்த மொழி
தன் இடைக்கு மணிமேகலையைப் பொருத்திய மொழி
உயிர் மெய் ஆயுதமுடன் இயங்கும் மொழி
குறிலும் நெடிலும் இசைந்தாடும் மொழி
வல்லினம் மெல்லினம் கொண்ட வனப்பு மொழி
வாழ்க்கைக்கு நல்ல வளஞ்சேர்த்த மொழி

அறிவியலுக்கு அறைகூவல் விடுக்கும் மொழி
மொழியியலுக்குச் சவால் விடுக்கும் திறன்மொழி
வேற்று மொழிகளுக்குச் சொற்கொடை அளித்த
- வள்ளல் மொழி
பல கிளை மொழிகளுக்குத் தாய் மொழி
இறைவன் தவிசிருந்து வளர்த்த மொழி
என்றுமே அழியாத எம் தேசத்தின் மொழி
சொல் ஏர் உழவரின் நாவில் களிடம் புரியும் மொழி
கால ஊழிக்கும் இயற்கையின் சீற்றத்திற்கும் ஈடு
-கொடுத்து வாழும் மொழி

சொல் வளம் பொருள் வளம் நிறைந்த மொழி
இயலும் இசையும் இனிய கூத்துமுடைய மொழி
இளமையும் இனிமையும் இணைந்த மொழி
இலக்கணத்துக்குத் தொல்காப்பியத்தை கொண்ட
- மொழி
அறநெறிக்குத் திருக்குறளைத் தந்த மொழி
முதற்குடிமக்கள் காப்பியத்தைப் படைத்த மொழி
நெற்றிக் கண்ணுக்கே குற்றமுரைத்த மொழி
நீடுழி காலங்கள் தமிழ்ப்பணி செய்ய வைத்த மொழி.

**செல்வநாயகம் ரவிசாந்**
குறிஞ்சிக்குமரன் வீதி,
வீரமனை, குப்பிளான்.

# இமையூர்த்தாசனின் இருகவிதைகள்

## தடம் மறந்தவர்கள்

வெளிநாட்டுப் பயணம்
மீள்வருகை
ஆடைமாற்றம்
ஆள் மாறவில்லை
மண்ணுலகத்து
மன்மதன்களாய்
தேவலோகத்து
தேவதைகளாய்
புனிதம் புரியாமல்
மனிதம் மதியாமல்
தடம் மறந்த இவர்கள்
நாகரிக் கோமாளிகள்

## முடியவற்ற பயணம்

முடியவற்ற பயணத்தில்
மலர்ப்பயணம்
எதுவரைக்கும் ...?
இற்றுப்போன
இவ்வுலகில்
இவற்றின்
பயணத்தின்
எல்லைதனை
எவர்தான்
அறிவாரோ....
மடிந்தவர்
மண்முகட்டில்
மடிகின்றன
இவற்றின்
வாழ்வு.......

**மா.செல்வதாஸ்**
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி

புதிய நிலா பிரசுரமாகும் படைப்புக்களின் கருத்து கட்டு அவற்றை எழுதிய படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புக்களைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

# தவிப்பு

கூடு கட்டி குடும்பத்துடன்
கூடி வாழ்ந்த காலமது
மகிழ்வான காலமதில்
மண் விழுமென - கனவு
எதுவும் காணவில்லை
காலம் இட்ட கட்டளையால்
குடி இருந்த ஊரையும்
கூட இருந்தவர்களையும்
குதூகலமான வாழ்வையும்
விட்டு அலைந்து
மர நிழலிலும் அல்ல
பாலை வனத்திலே
தவிக்க விட்டு
பாச உறவுகளை பார்க்க கூட - ஏலாது
பரிதவிக்கும் - பறவையாய்
இன்று - நான் தனிமையில் தவிப்புடன்
வாடுகிறேன் - என்
தவிப்பை யார் அறிவார்

**ந.சுதர்சினி (ஜெனா)**
குடத்தனை மேற்கு

நிலாவில் இடம் பெறும் அனைத்துப்போட்டிகளுக்கும் 1ம், 2ம், 3ம் இடங்களை பெறும் அதிர்ஷ்ரசாலிகளிற்கு முறையே 500, 250, 150 ரூபாய் பண பரிசில்கள் வழங்கப்படுவதுடன் அடுத்து வரும் 10அதிர்ஷ்ரசாலிகளிற்கு நிலாவின் அடுத்த இதழில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்படும்.

# காலம் செய்த கோலம்

அந்த இடத்தில் அவரை நான் காண்பேன் என்று கனவில் கூட நினைக்கவில்லை. எவ்வளவு வசதியான குடும்பம். என் பள்ளித் தோழனின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பணத்தின் சாயல் படிந்திருக்கும். அவனது தந்தையை போல நானும் பணக்காரனாக வரவேண்டுமென நான் பலமுறை நினைத்ததுண்டு அதனால் தான் என் தோழனின் தாத்தாவை அங்கு கண்டதும் அதிர்ந்து விட்டேன் அநாதைகளே.... வசதியற்றவர்களே அந்த முதியோரில்லத்தில் இருந்திருந்தால் நான் ஓரளவுக்கு இயல்பாக இருந்திருப்பேன் ஆனால்...



அந்த முதியோரில்லத்தில் என் தோழனின் தாத்தாவை அல்லவா கண்டேன். ஒரு கணம் திகைத்து போய் நின்று விட்டேன் அவர் அப்போது அங்கிருந்த பூச்செடிகளுக்கு நீர் ஊற்றி கொண்டு இருந்தார். எனக்கு அங்கு நடந்தது கனவா? நினைவா? என்று கூட சந்தேகம் ஏற்பட்டது. பெரிய மாளிகை வீட்டிலே சொகுசாக இருக்க வேண்டிய தாத்தா பூஞ்செடிகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டு இருப்பதை கண்டதும் அதிர்ச்சியடைந்தேன். அவர் அருகில் மெல்ல மெல்ல நடந்து சென்று தாத்தா என அழைத்தேன். அவர் மிகவும் வேகமாக தலையை திருப்பி நீயாப்பா? நான் எனது பேரன் என்று நினைத்துவிட்டேன். அப்போது நான் தாத்தாவிடம் கூறினேன். என்னையும் உங்கள் பேரனாக நினைத்துக் கொள்ளுங்கள் என்று நான் கூறியவார்த்தையை கேட்டதும் அவரது கண்கள் கலங்கத்

தொடங்கின நான் தாத்தாவை கேட்டேன் ஏன் தாத்தா நீங்கள் இங்கு இருக்கிறீர்கள் உங்களுக்குத்தான் அரண்மனை போன்றதோர் வீடு இருக்கிறதே என்று நான் கேட்க அவர் சற்று சலிப்புடன் எல்லாம் இருந்தும் என்னப்பா பயன் நிம்மதியான ஒரு வாழ்க்கை இல்லையே என்றார்.

நான் உடனே கேட்டேன் என்ன தாத்தா சொல்கிறீர்கள் உங்களது வீட்டில் ஏதாவது பிரச்சனையா என்று கேட்டேன். தாத்தா கேட்டார் என்னுடைய பேரன் உனக்கு ஒன்றும் சொல்லவில்லையா? இல்லை என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லை ஆனால் தாத்தா இப்போதெல்லாம் அவன் எங்களுடன் பெரிதாக கதைப்பதில்லை தானும் தன்னுடைய செயல்களுமாக இருப்பான் அப்போது தாத்தா எனது தோளில் தட்டி வா அங்கு போய் இருந்து கொண்டு எனக்கு காலம் செய்த கோலத்தையும் எனது பேரனின் மனமாற்றத்துக்கான காரணத்தையும் சொல்கிறேன் என்று கூறி என்னை இருத்தி விட்டு தானும் அமர்ந்து கொண்டார்.

எனது குடும்பத்தை பற்றி உனக்கு நன்கு தெரியும் ஏனெனில் என்ர பேரனின் உற்றதோழன் நீ தான் என்று அவனே என்னிடம் பலதடவை கூறியிருக்கிறான் அவனது தந்தை அதாவது என் மகன் தான் இதற்கு காரணம் எனக்கு ஒரே ஒரு மகன் அவனது தாய் அவனுக்கு ஐந்து வயதாக இருக்கும் போதே அவள் இறந்து விட்டாள். தாய் இல்லாப்பிள்ளையென்றாலும் அவனுக்கு செல்லம் கொடுத்து மிகவும் செல்லப்பிள்ளையாக வளர்த்தேன் அப்போதே நாங்கள் வசதியானவர்களாக இருந்தோம் எனது மகன் வளர்ந்து பெரியவனாகி ஒரு கம்பனியை கட்டி நடாத்தி வந்தான் அந்தக் காலத்திலேயே அவனிடம் தான் பணக்காரன் என்ற ஒரு உயர்ந்த எண்ணம் காணப்பட்டது. அவனுக்கு வயதாகி வந்ததால் திருமணம் செய்து வைக்க வேண்டிய கடமையொன்று எனக்கு இருந்தது.

அதன்படியே நானும் அவனுக்கு ஒரு பெண்ணை பார்த்து திருமணம் செய்து வைத்தேன். அவளும் பெரிய பணக்கார வீட்டு செல்லப்பிள்ளையாக இருந்தாள். அவளுக்கு நிறைய தோழிகள் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஒருநாள் வீட்டில் கும்மாளம் அடித்துக்கொண்டு இருந்தார்கள் அதை பார்த்து என்னால் சகிக்க முடியவில்லை இப்படியும் பெண்கள் உலகத்தில் இருக்கிறார்கள் என்பது எனக்கு அப்போது தான் தெரியவந்தது. நான் மிகவும் கோபமாக நீங்கள் எல்லாம் பெண்பிள்ளைகள் தானா? என்று ஏசினேன். அதற்கு அவர்கள் எல்லாம் எனது மருமகளைப் பார்த்து.. "யாரடி இந்த கிழடு"... என்றார்கள். அவளும் இந்தக் கிழடு தான் என்னுடைய மாமனார் என்று கூறினாள். அவளது தோழிகள் எல்லாம் மருமகளிடம் ஏதோ இரகசியம் சொல்லிவிட்டு எங்களை அதுக்கு பிறகு உன்னுடைய வீட்டுக்கு கூப்பிடு நாங்கள் வருகிறோம் என்று கூறிக்கொண்டு போனார்கள். எனக்கு ஒன்றும் அவள் தனது தோழிகள் சென்றதும் என்னருகில் கிழடுக்கு வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்கமுடியாதோ என்று கேட்டாள் எனது மனம் உடைந்து போய்விட்டது ஆனாலும் நான் மனதை தளரவிடாது நீ முதல் வீட்டுக்கு வந்த மருமகள் மாதிரி அடக்க ஒடுக்கமாக இரு இல்லையெண்டால் வீட்டைவிட்டு வெளியே போக வேண்டிய நிலை வரும் என்றேன்.

அதற்கு அவள் என்ன தெரியுமா? சொன்னாள். நீங்களா? நானா? வீட்டைவிட்டு போறது பார்ப்போம் என்றாள். எனக்கு அப்போது அவளுக்கு அறைய வேண்டும் போலிருந்தது. ஆனாலும் அவளின் வயிற்றில் அப்போது தான் எனது பேரன் உருவானான். ஆதலால் என் மனதை திடப்படுத்தி கொண்ட வேளை என்னை அறியாமல் எனது மனம் பேசத்தொடங்கிற்று. "சனியன்" எனது மருமகள் வடிவில் என் வீட்டுக்கு வந்துள்ளது. என்று நினைத்துக் கொண்டு சின்னப்பொண்ணு தானே என்று நினைத்தும் என் மகன் மீது இருந்த நம்பிக்கையாலும் நான் அன்று நடந்ததை கைவிட்டு விட்டேன்.

சில காலங்கள் சென்றன எனது பேரப்பிள்ளை வீட்டுக்கு வந்தான். அவனுடன் எனது பொழுதுகளை கழித்து வந்தேன். நான் பேரன் வந்த சந்தோசத்தில் எனது மருமகளின் கதையை மறந்துவிட்டேன். இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திய எனது மருமகள் என்ன தெரியுமா? செய்தாள். ஒரு நாள் நான் பேரனுடன் சந்தோசமாக இருக்கும் வேளையில் எனக்கு தெரியாமல் எனது மகனிடம் கூறிக் கொண்டு இருத்தாள் "உங்களது அப்பாவை எவ்வளவு காலம் தான் எங்களோடயே வைத்திருப்பீங்கள் எங்களுக்கெண்டு ஒரு பிள்ளையும் வந்திடுத்து"... என்றாள். அதுமட்டுமன்றி அன்றைக்கு நடந்த அந்த சிறுவிஷயத்தை பல சோடினைகள் செய்து ஒன்றை பத்தாக கூறினாள். "சரியம்மா அந்த கிழவன் இருக்கப் போறது இன்னும் கொஞ்சக் காலத்தானே இருந்திட்டு போகட்டும் ஆனால் எங்கட பிள்ளையை அந்தாளோட பெரிதாக பழகவிடுகிறதை குறை அதுதான் எங்களுக்கும் பிள்ளைக்கும் நல்லது" என்று கூறி இன்னும் கொஞ்சக் காலம் பொறு அந்த கிழவனோடு ஆட்டம் முடிஞ்சுவிடும் அதுமட்டும் இங்கேயே இருக்கட்டும் அதுக்குப்பிறகு நாங்கள் சந்தோசமாக இருக்கலாம். என்று கதைத்து சிரித்தார்கள் அவர்கள் கதைத்த ஒவ்வொரு வார்த்தைகளும் ஆணிபதித்தது போல பதித்துவிட்டன.

சில நாட்கள் சென்றது என்னால் அங்கு நடந்ததை சகிக்கமுடியவில்லை நான் அதுக்கு பிறகு அந்த வீட்டில் இருந்து என்னபயன். எனது பேரனுடன் சந்தோசமாக இருக்கும் போதெல்லாம் எனது மருமகள் குத்திப்பேசுவாள். இவற்றையெல்லாம் தாங்குவதற்கு எனக்கு மனத்தைரியம் இருக்கவில்லை. நான் எனது பெட்டிகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வெளியேறிய போது எனது மருமகள் ராட்சசியின் தோழிகள் என்னை நையாண்டி செய்து சிரித்துக் கொண்டு சென்றார்கள். அப்போது தான் இவர்கள் என்ன இரகசியமாக கதைத்தார்கள் என்பது எனக்கு விளங்கிற்று. பணம் பத்தும் செய்யும் என்பதை அந்த நேரமே உணர்ந்து விட்டேன். அதற்கு பிறகு தான் இங்கு வந்தேன் என்று தனது குமுறலை என்னுடனும் பகிர்ந்து கொண்டார்.

எனக்கும் மனதில் ஒரு பாரம் ஆனாலும் நான் தாத்தாவை கேட்டேன் உங்களையாரும் பார்க்க வரவில்லையா என்றேன். அதற்கு அவர் சொன்னார் இல்லையப்பா என் பேரன் பார்க்க வருவதற்கு அந்த இராட்சசி விடுவாளா? என்றார். நான் தாத்தாவின் கண்களை துடைத்து விட்டு தாத்தா என்னை உங்கள் பேரனாக நினைத்து கொள்ளுங்கள் நான் இனிமேல் உங்களை தினமும் மாலை பார்க்க வருவேன். அவரின் முகத்தில் அப்போது ஒரு சிறிய புன்முறுவல் பூத்தது. நானும் தாத்தாவை பார்த்து சிரித்து விட்டு ஒரு நாள் கட்டாயம் உங்களுடைய பேரனை நான் இங்கு கூட்டிவருவேன் என்று உறுதிமொழி கூறிவிட்டு தாத்தா "பெத்தமனம் பித்துபிள்ளைமனம் கல்லு" என்பார்களே! அது சரியாகத்தான் இருக்கிறது என்று கூறிக்கொண்டே தாத்தாவின் கண்ணீரை துடைத்துவிட்டு இன்று ஒரு பேரனை பார்த்தீர்களே விரைவாகவே உங்களுடைய மற்றுமொரு பேரனை பார்ப்பீர்கள் என்று கூறி எனது வீட்டை நோக்கி புறப்படலாயினேன்.

தெ.வாணுயா

**உங்களிடம் இருந்து .......**

உவகையுடன் எதிர்பார்க்கின்றோம்
இச் சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கேற்ற ஆக்கபூர்வமான படைப்புக்களை எமக்கு அனுப்பி வையுங்கள்

# கல்லறை நண்பர்கள்...

" போனால் போகட்டும் போடா இந்த பூமியில்
நிலையாய் வாழ்ந்தவர் யாரடா"...

என்றவாறு பாடிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி வந்தான் ராமு. இவற்றையெல்லாம் வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருக்கும் எனக்கு கண்களில் நீர் கொட்டத்தொடங்கியது. "என்ர பிள்ளையா இவன" என்ற எண்ணம் என் மனதுக்கு சொன்னேன். வீதியில் வரும் மோட்டார் சைக்கிளை மறிக்க மோட்டார் வண்டிக்காரன் என்ன என்று கேட்க "ஒன்றும் இல்லை" என்று பதில் கூறிய ராமுவைப் பார்த்து கேலி செய்துவிட்டு சென்றார்கள். ராமு வாசலில் வர நான் அவனை பிடித்துக் கொண்டு நடக்க "விடு கையை எனக்கு நடக்கத்தெரியும்" என்று கூறிவிட்டு தள்ளாடி நடக்க ஆரம்பித்து தனது அறைக்குள் சென்றான் "டேய் சாப்பிட்டு படேன்" என்று நான் கேட்க "ஓ ஏன் ஏதோ இன்டைக்கு புதுசா செய்தனியே? நெடுகலும் கஞ்சி சோறுதானே இதை தின்னுறதை பார்க்க விஷத்தை குடிக்கலாம்" என்று வாய்க்கு வந்தபடி பேசினான் ராமு.

பாயைப் போட்டு விட்டு நான் விளக்கை தனித்து விட்டு வந்து படுத்தேன். இமைகள் மூட மறுக்கின்றன வீட்டு கூரை ஓட்டையால் நிலா ஒளி வந்து கண்களை தொட்டு நித்திரையை குழப்புகிறது. விளக்கு ஒளியில் என் கண்களை ஊடறுத்துச் சென்றேன். என் முன்னையை வாழ்க்கையையும் என் மகனின் இனிமையான நாட்களையும் மீட்டுகிறேன்.

"இஞ்சருங்க வேண்டாம் அவன் இளசு நீங்களும் அவனுடன் சேர்ந்து விளையாடுகிறீர்கள்" என்று என்னுடைய கணவனைப் பார்த்து அதாவது துடுப்பாட்டம் விளையாடியவரைப் பார்த்து கூறினேன். ராமு "அப்பா! அவாவை விடுங்கோ நீங்கள் பேசாமல் விளையாடுங்க" என்ற கூறினான். நான் கோபித்துக்கொண்டு வீட்டுக்கு

செல்ல பின்பு இருவரும் உள்ளே ஓடிவந்தனர் "சரி சரி நாங்கள் விளையாடேல கோபிக்காதே" என்று ராமுவும் என்னுடைய கணவரான நாதனும் கூறினார். என்னுடைய கணவர்! தனியார் கம்பனியில் வேலை செய்கிறார் மாதம் இரண்டாயிரம் சம்பளம் என்றால் அவருக்கு சட்டென்று கோபம் வரும் "சரி வா வந்து சாப்பாடைபோடு" என்று என்னை பார்த்து சொன்னார். ராமுவும் அவரும் வந்து மேசையில் இருந்தனர். நாம் மூவரும் இருந்து சாப்பிட்டோம். அப்போது "அப்பா உங்களுக்கு ஒண்டு சொல்லனும்" என்று ராமு கூறினான். நானும் அவரும் என்னவென்று ஆவலாக பார்த்த வண்ணம் இருந்தோம். "அப்பா உங்களுக்கு ஆனந்தியை தெரியுமே? ....." என்று ராமு இறுவட்டு வெட்டுவது போல விக்கி விக்கி சொன்னான். "என்ன அவளை காதலிக்கிறியே இந்த வயசுல அதுதான் குறைச்சல் ஓ உனக்கு காதல் கேட்குது" என்று வாய்க்கு வந்தபடி பேசத் தொடங்கினார். நான் ஒன்றும் கதைக்காமல் நடப்பதையெல்லாம் பார்த்த வண்ணம் நின்றேன். "அப்பா நீங்க நினைக்கிறமா.... தி....ரி..." என்று சொல்ல வந்ததைக் கேட்காமல் அவர் மேசையை விட்டு எழுந்து போனார்.

"அம்மா நான் சொல்லுவதை கேள்..." என்று ராமு சொல்ல நான் அவ் இடத்தை விட்டு நகர்ந்தேன். நீண்ட நாட்களுக்கு பின்பு ஒரு செய்தி காதில் அடிபட்டது. அதாவது "ஆனந்தி இறந்துவிட்டாள்" என்று ராமு கதறி அழுது ஆனந்தி வீட்டை நோக்கி ஓடினான். அவன் செல்லும் வழியில் ஆனந்தியை சுடுகாட்டுக்கு கொண்டு செல்லக் கண்டான். நானும் அவனுடன் சென்றிருந்தேன். எனக்கு ராமு அழுவதைப் பார்த்து அழுகை வந்து விட்டது. "அழாத ராமு" என்று அவனை தடவ கையை தட்டிவிட்டான். "ஆனந்தி என்னைப்பார்.... என்னைப்பார்..." என்று ராமு கதறினான். "ஆண்டவனே எங்களுடைய நட்பை ஏன் ஒருவரும் புரியவில்லை இறைவா ஏன் என்னை படைச்சாய் எனக்கும் ஆனந்திக்கும் ஏன் நட்பை ஏற்படுத்தினாய்" என்று ராமு வானத்தை பார்த்து அழுது கீழே விழுந்தான். பின்பு ஆனந்தியின் பிணம்


அடக்கம் செய்யப்பட்டது. ராமுவை கூட்டிக்கொண்டு வந்து படுக்கவிட்டேன். பின்பு நான் ராமு அழுததை நினைத்தேன் அப்போது அவன் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தது. ஏதோ நட்பு என்று எல்லாம் சொன்னான். நான் உடனே "இஞ்சாருங்கோ அவன் ஆனந்தியை லவ் பண்ணல அது அவன்ர பிரண்டாம்" என்று சொன்னேன் "என்ன உளர்றாய்" என்று கேட்டார்.

"ஆமாங்க அவன் ஆனந்தியின் பிணம் செல்ல விழுந்து அழும் போது சொன்னவன்" என்று கூறினேன். "சரி காலை ஆகட்டும் விபரமாய் ராமுவை கேட்போம்" என்று அவர் சொல்லிவிட்டு படுக்க போனார். நான் கண்ணுறங்க ராமு சொன்ன சொற்கள் காதோரம் கேட்டவண்ணம் இருந்தது. காலை... "இஞ்சருங்கோ எழும்புங்கோ விடிஞ்சிடுச்சு" என்று அவரை தட்டி எழுப்பினேன்.

நான் சமயலறைக்கு சென்று தேனீர் போடச் சென்றேன் தேனீர் போடும் போதும் என் மனது நேற்று ராமு சொன்ன விடயத்தையே அலசிக்கொண்டு இருந்தது. எப்போது ராமுவிடம் கதைத்து எல்லாக் கதையையும் கேட்பேன் என்று இருந்தது பிறகு தேநீர் கொண்டு ராமு அறைக்கு சென்றேன். அங்கு அவனின் மேசையில் தேனீர் வைத்துவிட்டு "எழும்பி குடியடா..." என்று சொல்லிவிட்டு திரும்பினேன் அப்போது மேசையில் ராமுவின் டயறி இருந்தது. அதை எடுத்து வாசித்தேன். "என்னை யாரும் புரிஞ்சுக்கவில்லை" என்று எழுதிக் கிடந்தது.

நடுச்சாமப்பூசைக்கு அடித்த அம்மன் கோயில் மணி என் பழைய நினைவை நிறுத்திவிட்டது. என்றாலும் என்னுடைய மகனின் உண்மையான மனசை அறிய எனதுமனம் ஆசைப்பட்டது. நான் மீண்டும் எழுந்து ராமு அறைக்கு சென்று அந்த டயரியை எடுத்து வந்து விளக்கை தீண்டிவிட்டு மீதியை வாசிக்க ஆரம்பித்தேன். நானும் ஆனந்தியும் உயிர் நண்பர்கள் எனக்கு அவள் தாயைப்போல என்மேல் உயிரையும் வைத்திருக்கிறாள். நானும் அவளும் எந்த

வித எண்ணமும் இல்லாமல் நெருங்கிப் பழகினோம். றோட்டில் கண்டால் கதைப்போம் நான் அவளுடன் தான் பாடசாலைக்கு செல்வது உண்டு அவளை சில சமயம் ஏற்கிக்கொண்டு செல்வேன் இவற்றையெல்லாம் பார்த்த ஊர்மக்கள் நானும் அவளும் காதலிப்பதாக கூறினார்கள். இதை அறிந்துதான் நான் என்னுடைய அப்பாவுக்கு சொன்னேன் அப்பா கூட என்னை பேச விடாமல் தவறாக புரிந்து கொண்டார். ஏன் என்னைப் பெற்ற தாய்கூட என்னை புரியவில்லை என்று நான்கு பக்கம் முடித்த எனக்கு கண்கலங்க ஆரம்பித்தது. மீண்டும் கண்ணீரை துடைத்து விட்டு அடுத்த பக்கத்தை பிரட்டினேன். ஆனந்தியும் இதை வீட்டில் சொன்னாள் அங்கு புரிந்து கொண்டாள் தாய். ஆனந்தி "அம்மா ஊரார் எங்களை தப்பாக கதைக்கிறார்கள்" என்று கூறினாள். அப்போது அவளின் தாயார் "உலை வாயை மூடினாலும் ஊர்வாயை மூடமுடியாது" என்று கூறினார். சில நாட்களின் பின் அவளின் தாய் நெஞ்சுவலியால் இறந்துவிட்டார். வெளிநாட்டிலிருந்து வந்த ஆனந்தியின் அப்பா அவரின் கடைசி கிரியையை செய்தார். பின் அவர் ஆனந்தியோடுதான் இருந்தார். பின்பு ஊரில் யாரோஒருவர் ஆனந்தியின் அப்பாவிடம் நானும் ஆனந்தியும் காதலிப்பதாகவும் தவறான நடத்தை இருப்பதாகவும் கூறிச் சென்றனர். இதைக் கேள்வியுற்ற ஆனந்தியின் அப்பா ஆனந்தியை வீட்டிலிருந்து வெளியே விடாமல் அறைக்குள் பூட்டி அங்கு அவளை அடிப்பதாகவும் துன்புறுத்துவதாகவும் நான் கேள்விப்பட்டேன். நான் சென்று கதைக்க எனக்கு பயமாயிருந்தது. என்றாலும் பெற்ற



பிள்ளையை நெடுகலும் துன்புறுத்த மாட்டார் என்று நான் நினைத்தேன். இவரின் கொடுமை ஒன்றும் தாங்காத ஆனந்தி மருந்து குடித்து இறந்து விட்டாளாம் என்று என்னுடைய நண்பன் நந்தி கூறினான். இவ் அனைத்தையும் கேள்வியுற்ற நான் இனியும் வாழ வேண்டுமா? என்று விளங்காத புதிராக கேள்விக்குறி இட்டபடி கிடந்தது ராமுவின் டயரி.

நான் எழுந்து ராமு அறைக்கு சென்றேன். அங்கு ராமுவின் கட்டிலுக்கு கீழே விஷப்போத்தில் கிடந்தது. நான் ராமுவை எழுப்பினேன் ராமு எழும்பவில்லை. சிறிது நேரத்தின் பின் அவனின் மூக்கில் இருந்து இரத்தம் சிந்தியது. ஐயோ! என் ராமு என்னை மன்னித்து விடு, நான் உன்னை புரிந்து கொள்ளவில்லை என்று கதறினேன். கதறி என்ன பிரயோசனம் அவன் ஆனந்தியிடம் சென்று விட்டான். நண்பர்களை புரிந்துகொள்ள முடியாத நானும் என்னைப்போல இருப்பவர்களுக்கு கடைசியில் நரகம் தான் என்று கத்தியபடி அழுதேன். ஊர்மக்கள் வாயில் கைவைத்தபடி நின்று அவனுக்கு அஞ்சலி செய்தனர். நான் அவனுக்கு மேல் விழுந்து "மகனே நானும் புரியவில்லை இப்ப எல்லாரும் வந்து நின்று பார்த்து என்ன செய்தனர் இதனை முன் யோசித்ருத்தால் இவ்வளவும் நடந்திருக்குமா? " என்று கதறினேன். ஆனந்தியிடம் ராமு சென்று கல்லறையில் நண்பர்களாக இருக்கட்டும் என்று ஆனந்தியின் கல்லறைக்கு அருகில் ராமுவின் கல்லறையினை அமைத்தனர். நான் அஞ்சலி செய்து விட்டு கல்லறைக்கு அருகில் உட்கார்ந்து இருந்தேன்.

சிவபானுகா சிதம்பரநாதன்
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

புதிய நிலாவின் பாராட்டுக்குரியவர்கள் என்ற பக்கத்தில் நிலா அறிந்தவர்களைப் பாராட்டி இருக்கிறது. இலைமறையாக ஒவ்வொரு பிரதேசத்திலும் இருக்கின்ற கல்விப் புலம் சார்ந்த மற்றும் பல் துறை சார்ந்த சாதனையாளர்களை இனங்கண்டு அவர்களை எங்களுக்கு தெரியப்படுத்துமாறு வாசர்களை கேட்டுக் கொள்கின்றோம்.

# மனங்கள்

இயற்கையின் கிருபையோ தெரியவில்லை அந்தப்பாடசாலைக்கு பயிற்சி பெற நான் சென்றது முதன் முதற் பயிற்சி மனதில் ஒரு வித பதட்டம் கலந்த சந்தோசம். முதலாம் நாள் பாடசாலைக்கு கல்லூரி பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தேன் பஸ் ஒரே சீராக அமைதியாகப் போய்க்கொண்டிருந்தது. என் மனமோ பல மைல்களை கடந்து எங்கேயோ தொலைவிலே கற்பனையில் தாண்டவம் ஆடியது.

நாங்கள் இறங்க வேண்டிய இடத்தில் பஸ் நின்றது இறங்கி நடந்து போனோம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் பேசிப்பேசிக் கிண்டலடித்துக் கொண்டு வந்தார்கள். ஒருவன் என்னைப் பார்த்து சொன்னான் "காயத்திரி பதினைஞ்சு நாள் ரீச்சிங் பிறக்ரிஸ் பிள்ளையளை பார்த்துக் கொலை செய்யுங்கோ" என்றான்.

அதற்கு நானும் "ஏன் நான் மட்டுமா கொலை செய்யப்போறன் நீங்களும் தான் நீங்களும் பார்த்துக் கொலை செய்யுங்கோ" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டு போன போதே பாடசாலையின் வாசல் வந்து விட்டது.

சிறு தயக்கத்துடன் உள்ளே கால் பதித்தோம். பாடசாலையின் முன்பகுதியில் ஆரம்பப்பிரிவு வகுப்புக்கள் தான் காணப்பட்டன.. எங்களைக் கண்டதும் கொலிச் ரீச்சர் வந்திருக்கா கொலிச்சேர் வந்திருக்கார் என்று பல குரல்கள் தூரத்தே ஒலித்தன. அதையும் மீறி சிலர் கிட்ட ஓடி வந்து கை தந்து "குட்மோர்னிங் ரீச்சர்" என்று சொன்னார்கள். தொடர்ச்சியாக பல பிஞ்சுக் கரங்கள் என்கையை வருடின. அந்தக் கணத்தில் எனக்கு உலகமே ஒரு நிமிடம் என்னைச் சுற்றுவது போல இருந்தது. ஒரு வித கூச்சமும் என்னை பிடிக்க நானும் எல்லோருக்கும் குட்மோர்னிங் சொல்லி விட்டு அப்பாலே அகன்றேன்.

நாங்கள் சென்ற நாளில் அங்கே ஆசிரியர் தினவிழாக் கொண்டாட்டம் நடைபெற்றது. நாங்களும் அதிலே கலந்து கொண்டோம். நாங்கள் கொஞ்சம் கூட எதிர்பார்க்காத ஒரு சம்பவம் அங்கே நடைபெற்றது. அதிபர் உட்பட எல்லா ஆசிரியர்களும் மேடையில் வீற்றிருந்தார்கள் நாங்களும் நெளிந்து கொண்டு வீற்றிருந்தோம் ஆசிரியர்களை கௌரவிக்கின்ற நிகழ்வு இடம் பெற்றது.

அதிலே எல்லா ஆசிரியர்களையும் விட கல்லூரியில் இருந்து சென்ற எங்களிற்கு தான் முதலில் மாலையிட்டு கௌரவித்தார்கள். இச் செயல் எங்களையும் சந்தோசத்தில் ஆழ்த்தியது அதேவேளை அங்கே இருந்தவர்களின் மனங்களையும் படம் போட்டது அந்த சந்தோசம் நீங்காமலே வகுப்பறைக்கு சென்றேன் என் கொண்டையைச் சுற்றி மலர்கள்.

ஆறு பேர் மட்டுமே உள்ள வகுப்பில் எல்லோருடைய பெயரும் மனதில் பதிந்து விட்டது. கற்பித்தேன், அவர்களும் கற்றார்கள் அமைதியாக இருந்தார்கள் அடுத்த வகுப்பிற்கு சென்றேன் அங்கேயும் என்கையை பல பிஞ்சுக்கரங்கள் பற்றின அறிமுகங்கள் முடிந்தவுடன் கற்பித்தல் நடைபெற்றது.

ஐந்தாறு நாட்கள் இப்படியாக சென்றன ஒவ்வொரு மாணவராக உறவாடிக்கதைக்க ஆரம்பித்தேன் எல்லோரது விபரங்களும் வேதனையை பிழிந்தது. இப்போது அவர்களிடம் அதிக நெருக்கம் ஆகிவிட்டேன். அவர்களும் என் மீது அதிக கவனம். கையில் ஒரு சிறிய பையை கூட என்னை தூக்க விடமாட்டார்கள். நெருக்கங்கள் அதிகமாக என் கையின் பற்றுதல்களை அவர்கள் தீவிரப்படுத்தினர். அதேவேளை குறும்புத்தனங்களும் செய்ய ஆரம்பித்தனர். பாடம் கற்பிக்கும் போது குழப்பம் செய்ய எனக்கு சிறிதான கோபத்தையும் உண்டாக்கியது.

கோபித்துக் கொண்டு பேசாமல் நான் இருந்த போது "டேய் ரீச்சருக்கு கோபம் வந்திட்டுதடா பேசாமல் இருங்கோடா" என்று ஒருவன் கூறுவான். பின்பு கிட்டவந்து என் கன்னத்தை கிள்ளி "ரீச்சர் எங்களோட கோபமா? " என்று கெஞ்சும் போது என்னையறியாமலே சிரித்து விட்டேன். உடனே லக்ஷனாவின் கீச்சுக்குரல் சிரிப்பு வகுப்பறை முழுவதையும் அலங்கரிக்கும். தன்னை கேள்வி கேட்கவில்லை என்று முகத்தை தூக்கி வைத்துக்கொண்டு என்னுடன் கோபித்துக் கொண்டிருக்கும் பிறின்சி, குழப்படி செய்துவிட்டு நான் பார்க்கும் போது அப்பாவியாய் சிரிக்கும் சங்கீத், கேள்வி கேட்கும் போது எழும்பிப் பதில் கூறாது கதிரையிலே சோம்பேறியாக இருக்கும் குண்டுத்தனுசன் குழப்படி செய்தால் அடிப்பேன் என்று நான் கூறும் போது "ரீச்சர் அடியுங்கோவன்" என்று கையை நீட்டி கெஞ்சலாக கேட்கின்ற சுமன் என்ன சொன்னாலும் சிரித்துக் கொண்டே அமைதியாக கேட்கின்ற யேகிஷா.

இவர்கள் தான் அந்த வகுப்பறையில் மொத்தமானவர்கள் நாளாக நாளாக இவர்களுடனான நெருக்கம் அதிகரித்தது வாங்கோ போங்கோ என்று கூப்பிட்டு இன்று வாடா, வாடி என்கின்ற அளவிற்கு வந்துவிட்டது அவை மரியாதை இல்லாத சொற்களா?

அடுத்த வகுப்பிற்கு சென்றேன் அங்கே அதிக மாணவர்கள் காணப்பட்டார்கள். ஒரு மாணவி வகுப்பை குழப்பிக் கொண்டு இருந்தாள் அவளை கட்டுப்படுத்த முடியவில்லை.

"குழப்படி செய்ய வேண்டாம்" என்றேன் அவளோ கேட்பதாய் இல்லை அடித்து விடுவேன் என்றேன் அடியுங்கோ என்று கேட்டு விட்டுச் சிரிப்பாள். அதற்கு பிறகு என்னால் என்ன செய்ய முடியும்.

ஒரு நாள் குழுச்செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு சோடா மூடிகளை எல்லோரிடமும் கொடுத்தேன். உடனே அவள் "அக்கா எனக்கு சோடா மூடி தரேல்லை" என்றாள். எனக்கு என்ன செய்வதென்று தெரியாமல் "என்னது அக்காவோ?" என்றேன்.

ஓ நீங்கள் அக்கா தானே என்று துடுக்காக சொன்னாள் அவளது செயல் எனக்கு கோபத்தை உண்டாக்கவில்லை.

நாளாக நாளாக அவளது குழப்படி தாங்க முடியவில்லை. உன்னோடை கதைக்க மாட்டேன்டி என்றேன் அவளும் அதற்கு "அதுக்கென்ன நானும் கதைக்க மாட்டேன்" என்று முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு பேசாமல் இருப்பாள் மற்றைய மாணவர்களையும் குழப்பிக் கொண்டு இருப்பாள்.

நான் இனி வகுப்புக்கு வரமாட்டேன் என்று சொன்னேன் உடனே எல்லா மாணவர்களும் "ஏன் ரீச்சர் வரமாட்டீங்கள் ரீச்சர் நாங்கள் குழப்படி செய்யமாட்டம் ஒவ்வொரு நாளும் வாங்கோ" என்றார்கள். அதில் ஒரு மாணவன் "ஜனனி நீ குழப்படி செய்யறதால தான் ரீச்சர் வகுப்புக்கு வரமாட்டாவாம்" என்றான்.

ஏன் "நான் வகுப்புக்கு வரவேண்டாம் என்று சொல்லவில்லை தானே நீங்கள் வகுப்புக்கு வாங்கோ ஆனால் என்னோடை கதைக்க வேண்டாம்" என்று ஜனனி சொன்னாள்.

ஏதோ தன்னாலை தான் நான் வகுப்புக்கு வரமாட்டேன் என்ற நினைப்பு அவளிற்கு.

---

பின்பு நான் கற்பித்துக் கொண்டிருக்கும் போது மறுபடியும் ஒரு தடவை என்னை அக்கா என்று கூப்பிட்டு விட்டாள். ஒரு ஆசிரியராய் அல்லாமல் அவள் கூறுவது போல அக்கவாக இருந்து பார்க்கும் போது அவளது குறும்புத்தனங்கள் என்னை சந்தோசப் படுத்தினதான்.

ஒரு நாள் படிப்பித்துக் கொண்டிருக்கும் போது கதவைத்திறந்து வெளியிலே அவள் போய்விட்டாள். நான் உடனே போய் கையிலே பிடித்துக் கொண்டு வந்து வகுப்பறையில் இருத்திவிட்டேன். நான் கரும்பலகையில் எழுதும் போது தானும் வந்து எழுதுவாள். கேள்விகள் வேறொருவரிடம் கேட்டால் கூட தானே பதிலை கூறிவிட்டு எங்கேயோ பார்த்துக் கொண்டிருப்பாள்.

இப்படியாக என்னுடைய ஒவ்வொருநாள் பயிற்சியும் பலதடங்கல்களுடனும் சந்தோசத்துடனும் கழிந்தது. கடைசி நாள் வந்தது. மனதிலே ஏதோவொரு நெருடல் நான் கையிலே கொண்டு சென்ற ஆவணங்கள் எல்லாம் வாங்கப்பட்டு வகுப்பறைக்கு கொண்டு செல்லப்பட்டது. வகுப்பறைக்கு சென்றேன் பாடங்கள் தொடங்க முதல் எல்லோருடனும் நின்று புகைப்படம் எடுத்தேன். அன்று ஜனனி வரவில்லை காரணம் தெரியவில்லை. அவள் சொன்ன வார்த்தை எதிரொலித்தது"நான் உங்களோடை கதைக்க மாட்டன்"

குற்ற உணர்வு முள்ளாகத் தைப்பதைப் போல இருந்தது. புகைப்படம் எடுத்து முடித்து பாடங்களும் கற்பித்து முடித்து ஓய்வு நேரம் கொஞ்சம் இருந்தது. அந்த மூன்றாம் வகுப்பு என்னிடம் கேட்டது.

"ரீச்சர் போக முதல் எங்களுக்கு சோறு ஊட்டி விடுங்களேன்" என்றார்கள். ஆம் அந்தப்பாடசாலையில் மதிய உணவு கொடுக்கப்படுவதுண்டு. சோற்றினை ஊட்டி விட்டேன். வீட்டிலே சுட்டிப் பெண்ணாக நான் ஆனால் இங்கே ஒரு தாய்க்கு ஈடாக... எப்படி திடிரென்று இப்படியொரு பதவி உயர்வு பாடசாலையை விட்டு வெளியேறுகின்ற நேரம் வந்து விட்டது. எல்லோரிடமும் இருந்து ஒவ்வொருத்தராக விடைபெறச் சென்றேன். என்னிலும் பெரியவர்கள் ஆசிர்வதித்தார்கள் அறிவுரை கூறினார்கள். என்னிலும் சிறியவர்கள் காலிலே விழுந்து ஆசிர்வாதம் கேட்டார்கள். அதற்குரிய தகுதி என்னிடம் இருக்கா தெரியவில்லை ஆனாலும் மனசார வாழ்த்தினேன்.

பல கைகள் என் கையை ஓயாமல் பிடித்துக் கொண்டே இருந்தன. நான் பாடம் எடுக்காத மாணவர்களும் கூட அதில் அடங்குவர் ஏன் இப்படி? நான் அவர்களுக்கு என்ன செய்தேன் ஒரு "குட்மோர்னிங்" சொல்லி கையை கொடுப்பேன் அத்துடன் இரண்டு வார்த்தை மேலதிகமாக பேசுவேன் இந்தச் செயல் அவர்களை என்மேல் ஈடுபாடு கொள்ளச் செய்து விட்டதா?

என் சேலைத் தலைப்பை பிடித்துக்கொண்டு கொஞ்ச வால்கள் என் பின்னாலேயே வந்தன எனக்கு வெட்கமாக இருந்தது. "சாறியை விடுங்கோ" என்றேன் அவர்கள் விடவில்லை அதைபார்த்த ஆண்டு பத்தில் படிக்கும் ஒரு மாணவன்.

"சாறியை பிய்க்கப் போறாங்கள் ரீச்சர்" என்றான் நானும் சிரித்து விட்டு போனேன்.

"ரீச்சர் நீங்கள் இங்கேயே இருங்கோவேன் எங்களுக்கு படிச்சுக் குடுங்களேன்" என்று பல குரல்கள் என் மௌனத்தை கலைத்தன. வேறொரு நாள் வருகிறேன் என்று நானும் மெய் போன்ற பொய் சொல்லி விட்டு முகவரியை கொடுத்து விட்டு பாடசாலையை விட்டு வெளியேறினேன்.

என் கையிலே எந்தப்பொருட்களும் இல்லை. அவற்றை காவிக் கொண்டு பல கால்கள் என்னுடன் நடந்தன. வழியிலே லக்ஷனாவும் பிறின்சியும்.

"ரீச்சர் இந்த ஒழுங்கைக்குள்ளை தான் எங்கடை வீடு நீங்கள் இதிலை கேட்டா காட்டுவினம் லீவுக்கு வாங்கோவன்" என்றார்கள்.

"ஓம்" என்று; தலையாட்டி விட்டு நடந்தேன்.

நான் பஸ் ஏறுகிற இடத்திற்கு சென்று விட்டேன் தூரத்திலிருந்து பல கைகள் எனக்கு கை அசைத்தன. பல கண்கள் உற்றுப்பார்த்தன. கண்களில் ஏக்கம் என் நெஞ்சினில் நெருப்பு. போதும் படி கையை காட்டினேன் பஸ் வந்து விட்டது ஏறிவிட்டேன் எனக்குள் பல கேள்வி அலைகள்.

நான் அவர்களது மனங்களை வென்று விட்டேனா? கொன்று விட்டேனா? என்னுடன் கூட வந்தவர்களும் ஆளுக்கொரு திசையில் மௌனமாய்.

**T. காயத்திரி**
முகிழ் நிலை ஆசிரியர்
வவுனியா

## "புதிய நிலாவின்" சந்தா விபரம்

தனிப்பிரதி - 50/=
ஆண்டு சந்தா - 1000/=
ஆயுள் சந்தா - 15000/=

ஓராண்டுக்குரிய சந்தா செலுத்த விரும்புவோர். காசோலை மூலமாகவோ அல்லது மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம் மணியோடரை கரவெட்டி தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

**அனுப்பவேண்டிய முகவரி: -**

கு. அஜித்குமார்,
"நிர்மலஸ்தான்"
நல்லாதோலை,
வதிரி கரவெட்டி

**வங்கி மூலம் செலுத்த விரும்புவோர்: -**

K. Ajithkumar
Commercial Bank, Nelliady
A/C 8108007512

என்ற வைப்பில் செய்து வங்கிப்பிரதியை மேற்குறிப்பிட முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

# ஓசோன்படை தேய்வும் அதன் விளைவும்

மாறன் மண்டலத்திற்கும் படை மண்டலத்திற்கும் இடையில் காணப்படும். தனித்துவமான வாயுக்களைக் கொண்டதாக ஓசோன்படை அமைந்து காணப்படுகின்றது. இவ் ஓசோன்படை மெல்லிய வளிமண்டலத் தொகுதியைக் கொண்ட இப்பகுதியில் புற ஊதாக் கதிர்கள் தாக்கமுறுகின்றன. 1940 இல் அந்தாட்டிக் பகுதியில் இப்படையில் துவாரம் ஏற்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காணப்படும் இவ் ஓசோன் வாயுவானது மூன்று ஒட்சிசன் மூலக் கூறுகளின் ($^{0}3$) இணைப்பினால் உருவானது. இவ் ஓசோன் படையானது 15km தொடக்கம் 35km வரையான வளிமண்டலப் பகுதியில் செறிவாக காணப்படுகின்றது. ஓசோனின் பரவலினை ''டெப்சன்யுனின்'' என்னும் கருவிமூலம் அளவிடப்படகின்றது. இவ் ஓசோன் வாயுவானது வளிமண்டலத்தில் 0.00006% கொண்டுள்ளது.

ஓசோன் படையான பின்வரும் செயற்பாடுகளின்மூலம் மனித வாழ்க்கைக்கு மிகுந்த செல்வாக்கு செலுத்தி நிற்கின்ற தன்மையினை காணகூடியதாக உள்ளது. வெப்பம் மிகுந்த சூரியனின் புற ஊதக் கதிர்கள் இப்படையில் பட்டு தெறிப்பதன் மூலம் குறைந்தளவு வெப்பத்தையே உள்நுழைய விடுகின்றது. இதனூடாக புவியின் வெப்பச் சமநிலையைப் பேணுவதில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

ஞாயிற்றில் இருந்து வருகின்ற புற ஊதாக் கதிர்கள் புவி மேற்பரப்புக்கு வராது தடுப்பதனால் புற்று நோயில் இருந்து உயிரினங்களை பாதுகாத்துக் கொள்ள முடிகின்றது.

இடி மின்னல் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் புவிக்கு அருகாமையில் தோற்றம் பெற்று உயிரினங்களை பாதுகாத்தல்

இப்படை கருவிகளை அழிக்கும் தன்மையை கொண்டதாக காணப்படுதல் அதாவது மழைநீரை சுத்திகரிக்கும் தன்மையைக் கொண்டது.

இவ்வாறு மனிதனுக்கு பல்வேறு வகைகளில் நன்மை விளைக்கும் ஓசோன்படையானது மனித நடவடிக்கையினாலும், இயற்கை காரணிகளினாலும் ஏற்படும் இராசயன மாற்றங்களின் காரணமாக ஓசோன் மூலக் கூறுகள் பிறவடிவங்களுக்கு உட்படுத்தல் அல்லது செயலிழத்தல் ஓசோன் படைச் சிதைவு எனக்கூறப்படுகின்றது. இவ்வாறு காணப்படும் ஓசோன்படையில் துவாரம் இருப்பதாக 1982ம் ஆண்டு "கலிபே" என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பின்னர் 1985இல் நிம்பஸ் 7 (mimbus - 7) என்ற ஆய்வின் ஊடாக இதுபற்றிய மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடிந்தது. இவ்வாறு ஓசோன்படையில் துவாரம் மொனொட் சைட் நைதரசன், ஓட்சைட், குளோரீன், ஈயரார்கள், மெதேன், போன்றன காரணமாகின்றது. இவ் ஓசோன் படைச் சிதைவு உலகளாவிய ரீதியில் இதன் தாக்கத்தை அறிய முடிந்த பொழுதிலும் றியோடி யெனிரோ, சிலி, சந்தியகோ, நியூசிலாந்து, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் தெளிவாக இதன் தாக்கத்தை கண்டு கொள்ள முடிகின்றது.

ஓசோன் படையில் துவாரம் ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இருப்பது குளோரோ புளோரோகாபன் (CFC) வாயு ஆகும். இவ் CFC வாயுவானது வருடாந்தம் 750000 தொன் வளிமண்டலத்தில் சேர்க்கப்படுகின்றது இவ் CFC வாயுவானது.

குளிர்சாதனப் பெட்டி - 15%

குளிர் ஊட்டப்பட்ட வாகனம் - 20%

வளித் தெறிப்பான் - 15%

சுத்தம் செய்யும் கைத்தொழிலின் சாரை உருவாக்கல் - 24% மருத்துவ, அழகுசாதனப் பொருட்கள்

பிளாஸ்ரிக் றெயிபோம் போன்றவற்றை எரித்தல்

விமானங்கள் (சுப்பசொனிக்) செய்மதிகள் என்பவற்றில் இருந்து வெளியேற்றப்படும் புகைத்துணிக்கைகளும் வாயுக்களும் ஓசோன்படையில் சிதைவினை ஏற்படுத்தல். CFC வாயுவினைத் தவிர ஓசோன்படையில் துவாரத்தை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துவதில் சதுப்பு நிலங்களும் காணப்படுகின்றது. இவ் நிலங்களில் இருந்து வெளியேற்றப்படும் மெதேன் வாயுவும் சிதைவினை ஏற்படுத்துகிறது.

ஓசோன் படையில் துவாரத்தை ஏற்படுத்துவதில் எரிமலை வெடிப்பும் பங்களிப்பு செய்கின்றது. எரிமலை வெடிக்கின்ற வெளியேற்றப்படும் வாயுக்கள் ஓசோன் படையில் துவாரத்தை ஏற்படுத்துவதில் பங்களிப்பு செய்கின்றது. ஓசோன் படைச் சிதைவினால் இயற்கை வளங்களும் மனிதனும் பல்வேறு நெருக்கடிகளை இன்று எதிர் கொள்வதை கண்கூடாக பார்க்க முடிகின்றது. CFC வாயுவானது வளிமண்டலத்தில்
$O_3$ உடன் அந்த வாயு தாக்கமுறுகின்ற இதனால் $O_3$ சிதைவடைகின்றது. இதனால் ஏற்படும் பாதிப்புக்களாக கோள வெப்ப அதிகரிப்பு:- புற ஊதாக் கதிர்கள் வெப்பமான கதிர்களாகும். இவை புவியின் வளிமண்டலத்தை அடையும் போது வளிமண்டல வெப்பநிலை உயர்கின்றது. மேலும் CFC பச்சை வீட்டு வாயு வகையால் வளிமண்டலத்தில் அதன் அதிகரிப்பானது கோள வெப்ப அதிகரிப்பிற்கு வழி வகுக்கின்றது.

மரபணுக்கள் மாற்றியமைக்கப்படல்:- CFC இன் தாக்கத்தால் $O_3$ படை சிதைவடைகின்ற போது உள்வரும் புற ஊதாக் கதிர்கள் புவி மேற்பரப்பில் வாழ்கின்ற மனிதன் உள்ளிட்ட விலங்குகளை பாதிக்கின்றன. இக்கதிர்களின் தாக்கத்தால் மனிதன் உள்ளிட்ட விலங்குகளின் மரபணுக்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. இதன் காரணமாக மனிதன் உள்ளிட்ட விலங்குகளில் பிறப்புக் குறைபாடுகள் ஏற்படுகின்றன.

மனித சௌக்கியம் பாதிக்கப்படல்:- CFC ஓசோன் படையை சிதைவடைய செய்து புற ஊதாக்கதிர்கள் உள்வருகின்ற போது மனிதர்களுக்கு புற ஊதாக்கதிர்களின் தாக்கத்தால் பல நோய்கள்

ஏற்படுகின்றன. குறிப்பாக கண்ணின் விளி வெண்படலம் பாதிக்கப்படல், தோல் புற்றுநோய், தோல் எரிவு, சுவாசத் தொகுதி தொடர்பான நோய்கள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக மனித சௌக்கியம் பாதிக்கபடல்.

உயிர்ப்பல் வகைமை அழிவு:- புற ஊதாகக்கதிர்களின் தாக்கத்தினால் சமுத்திர சூழல் தொகுதியில் காணப்படும் தாவரப்பிளாந்தன்களின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. இவை சமுத்திரச் சூழல் தொகுதி உற்பத்தியாக்கியாகையால் உற்பத்தியில் தங்கியுள்ள விலங்குகள் இறக்கின்றன. மேலும் புற ஊதாக் கதிர்களின் தாக்கத்தால் சிலவகைத் தாவரங்கள் இறக்கின்றன. இதனால் மேற்பரப்பு சூழல் தொகுதியிலும் சிலவகை உயிரினங்கள் அழிவடையும் நிலை உருவாகின்றது. இது புவியில் உயிர்ப்பல்வகைமை இழப்பினை ஏற்படுத்துகின்றது.

காலநிலை மாற்றம் ஏற்படல்:- CFC இன் தாக்கத்தால் $O_3$ இல் சிதைவு ஏற்படுகின்ற போது ஏற்படும் புற ஊதாக் கதிர்களின் உளவருகை புவிச் சூழலின் காலநிலை நிலமைகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. வளிமண்டல வெப்ப அதிகரிப்பின் விளைவாகவே உலகில் இன்று திடீர் திடீர் காலநிலை மாற்றங்கள் உருவாகின்றன.

இன்று உலகில் வாழும் அனைவருக்கும் ஓசோன் படை தேய்வு சவாலாக இருப்பினும் அதனை இழிவாக்கிக் கொள்ள இன்று சர்வதேச ரீதியாக ஒப்பந்தங்கள், பிரகடனங்கள், மகாநாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையிலே இப்பிரச்சனையை குறைப்பதற்காக 1985ம் ஆண்டு வியன்னாப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1987ம் ஆண்டு கனடா ஒன்றியல் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது. இவ் மொன்றியல் பிரகடனம் 2005 NOV - 28 தொடக்கம் DEC - 9ம் திகதி வரை மொன்றியலில் நடைபெற்றது. இதில் 189 நாடுகளைச் சேர்ந்த 3000 பிரதிநிதிகள் பங்கு பற்றி ஓசோன் படையின் தேய்வினை

இழிவளவாக்குவது பற்றி கலந்தாலோசித்தனர். இன்று ஓசோன் படையின் தேய்வு பற்றி சர்வதேச ரீதியாக நடைபெறும் சூழல் மகா நாடுகள் பற்றி கலந்து ஆலோசித்து தீர்க்கமான முடிவுகளை எடுத்துக்கொள்கின்றனர். 2007ம் ஆண்டு டிசெம்பர் மாதம் இந்தோனோசியாவின் பாலித் தீவில் நடைபெற்ற மாநாட்டில் ஓசோன் படை தேய்வு பற்றியும் புவி வெப்பமடைதல் பற்றியும் ஆராயப்பட்டன.

இன்று உலகளாவிய ரீதியில் ஓசோன்படை தேய்வினை குறைப்பதற்காக CFC வாயுவிற்குபதிலாக HCFC (கைற்றோ குளோரோ புளோரோக்காபன்) போன்ற வாயுக்களின் பயன்பாட்டை அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் கைத்தொழில் நடவடிக்கையில் சக்திவளமாக சுவட்டு எரிபொருள் பயன்படுவதை குறைந்து அதற்கு மாற்றீடாக நிர்மீன், சூரியசக்தி, காற்றுசக்தி என்பவற்றினை பயன்படுத்தி இப்பிரச்சனைக்கு ஓரளவு தீர்வு காணமுடியும். இவ்வாறு மாற்றுவளங்களைப் பயன்படுத்தி ஓசோன் படையின் தேய்வினை குறைத்து எதிர்கால சந்ததியினரும் நலமுடன் வாழ வழி வகுப்போம்
.

**செ.நிசாந்தன்**
விக்னேஸ்வராக் கல்லூரி
கரவெட்டி

உசாத்துணை நூல்கள்

சுற்றுச் சூழலியல் - கலாநிதி க. குணராசா
நாளைய உலகம் - இந்தியா ருடே சென்னை
பாலை பிரவுகிறது - கலாநிதி க.குணராசா
தியோடா பாஸ்கரன் சு.2007 ஆடாகிவரும் உலகம் தமிழ்நாடு
கையேடு - ஆசிரியர் சு. கிருஷ்ணராஜா
கையேடு - ஆசிரியர் சி.சிவகுமார்.

## நான் விரும்பும் இலக்கிய நூல் கம்பராமாயணம்

வடமொழியில் இராமாயத்தை வால்மீகி மாமுனிவர் தந்தார். இதனை தமிழ் மரபிற்கேற்ப தந்தார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். ஒருவன் இவ்வுலகில் சகல செல்வங்களையும் நுகர்ந்திருக்கும் இன்பத்திலும் பார்க்க மேலான இன்பத்தைத் தருவது கம்பராமாயணம். இவ்விலக்கியம் ஒரு இன்பப் பொக்கிஷம்.

அறுபத்து மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்து அறுபத்து மூவாயிரம் தேவியரை மணந்து மகிழ்ந்த போதும் தசரத மன்னனுக்குப் புத்திரபாக்கியம் கிடைக்கிவில்லை. வசிட்டமாமுனிவரின் ஆலோனைப்படி புத்திர காமேஷ்டியாகம் செய்வித்ததன் பலனாக கோசலை தேவி இராமரையும் கைகேயி தேவி பரதனையும், சுமித்திராதேவி இலக்குமணனையும், சந்துருக்கனையும் பெற்றெடுத்தனர். இதனால் அதிகளவில் மகிழ்ச்சியை தசரதன் பெற்றான்.

இராமன் சிறுபாலகனாக இருந்த போது விசுவாமித்திரமாமுனிவர் தான் செய்யவிருந்தயாகத்திற்கு தாடகை என்னும் அரக்கி கிடையூறு விளைவித்தாகக்கூறி தனது யாகத்திற்கு பாதுகாப்பளிக்க ராமரை தன்னுடன் அனுப்புமாறு வேண்ட, தசரதன் தான் வருகின்றேன் எனவும் தன்னுடைய மகன் சிறுபாலகன் எனவும் கூற கோபமடைந்த விசுவாமித்திரரை சமாதானப்படுத்தி வசிட்டமுனிவர் இராமனை அனுப்பி வைக்கிறார். இராமர் சிறுபாலகனாக இருந்த போது தாடகையை அழித்து யாகத்தை வெற்றிகரமாக அதை வழி வகுத்தார்.

மந்தரையின் சூழ்ச்சியால் மனம் மாறுபட்ட கைகேயி தசரதனிடம் இரண்டு வரங்களைக் கேட்கிறான். ஒன்று பரதன் முடி சூடவேண்டும் மற்றையது இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். தசரதன் மனம் கலங்கியவனாய் பரதன் நாடாளட்டும் எனவும், இராமர் வனவாசம் மேற்கொள்ள வேண்டாம் எனவும் கூறினார். மீண்டும் வற்புறுத்திய கைகேயியின் வரங்களை ஆதரித்து தனது உயிரை நீத்து விடுகின்றார். இராமன் தனது முடிசூட்டு விழா பற்றிய செய்தியினை

தன் தாயிடம் தெரிவிக்க முன் கையேயியிடம் தெரிவிக்க அந்தப்புரம் நோக்கிச் சென்று கொண்டிருக்க அவனை எதிர்ப்பட்ட கையேயி தான் தசரதனிடம் பெற்ற இருவரங்களையும், தெரிவிக்க இராமன் கவலையடையாது மிகவும் மகிழ்ந்தவனாய் தனியாக வனவாசம் செல்ல புறப்பட்டார். தன் நாயகன் மரவுரி தரித்துக்கானகம் செல்லத் துணிந்த போது சீதாபிராட்டியும் உடனாகப் புறப்படுகிறார். பின்னர் தமையனுடன் இலக்குமணனும் புறப்பட்டான். இவர்கள் கானகம் சென்று கொண்டிருக்கையில் இராமன் கங்கையில் படகோட்டியான குகனை அறிமுகம் செய்து வைத்தார், கிஷ்கிந்தை மலைச் சாரலில் சுக்ரீவனைச் சந்தித்து உறவு கொண்டாடி பின் கானகத்தை அடைந்தார். இலங்கா புரியில் இராவணனோடு போர் செய்து கொண்டிருக்கையில் இராவணன் ஆயுதங்கள் அனைத்தையும் இழந்து நிராயுதபாணியாக நின்ற போது இராவணனை நோக்கி "இன்று போய் போருக்கு நாளை வா" என்று கூறி சாந்த சொருபியாய் இராமன் நின்றார்.

போரின் பின் அரக்ககுலம் அத்தனையும் மாண்டு போக இராமன் விபீஷணனுக்கு இலங்கையில் முடி சூட்டி தன் தேவியான சீதையை அழைத்துச் சென்று இலக்குமணனுடன் வனத்தை நோக்கிப் புறப்பட்டார். பின்னர் பரதன் தன் தமையனை அயோத்தி நகருக்கு அழைத்தும் அவர் செல்ல அனுமதிக்கவில்லை. பதினான்கு ஆண்டுகள் கழிந்த பின்னே வருவதாகக் கூறினார். இராமரது பாதணியை தன் சிரசின் மீது வைத்து பரதன் சிம்மாசனத்தில் வைத்து ஆட்சி புரிந்து வந்தான்.

பதினான்கு ஆண்டுகள் கழியப்போகும் நேரத்தில் இராமன் அயோத்திக்குச் செல்லாமையால் மனமுடைந்து பரதன் அக்கினி வளர்த்து அதில் மாள நினைத்த போது இராமன் தன் வருகையை அநுமாரிடம் தெரிவித்து தெரியப்படுத்துகிறார்.

இங்ஙனமாக மனித நேய விழுமியங்களையும், அமர கிருஷ்டியையும் தாங்கி நிற்கும் கம்பராமாயணம் எனும் பேரிலக்கித்தை நான் பெரிதும் விரும்புகிறேன்.

**த.கஜந்தினி**

யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம்

## மேரி - நிஷாந்தினியின் பேட்டி

**1) நீர் எந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்றீர்கள்? உமது வளர்ச்சிக்கு எவ்வாறு உமது பாடசாலை உதவியது?**

நான் குடத்தனை கரையூர் அமெரிக்க மிசன் பாடசாலையில் தரம் 11ல் கல்வி கற்கின்றேன். எனது இந்த வளர்ச்சிக்கு எமது பாடசாலை ஆசிரியர்களும், சஞ்சிகைகளுமே உதவின.

**2) உமது படைப்புக்கள் பற்றி கூறுங்கள்?**

முதலாவது 2008ல் வெளிவந்த கடுகு சஞ்சிகையில் "தன்மான உறவு" என்ற சிறுகதை எழுதினேன். அதற்கு அனைவரினது பாராட்டும் எனக்கு கிடைத்தது. மாவட்டத்திலே வெளிவருகின்ற சஞ்சிகைகளுக்கு சிறுகதைகளை எழுதினேன்.

**3) 2009ல் கலை இலக்கிய கலாச்சார பேரவை நடத்திய சிறுகதைப் போட்டியில் "பாசம்" சிறுகதை 2ம் இடத்தை பெற்றது. இது பற்றி உமது கருத்து யாது?**

நான் இந்த வெற்றியைப் பெறுவதற்கு எமது ஆசிரியர்களே முக்கிய காரணம். மேலும் நான் பல சிறுகதைகளை சுயமாக எழுதினேன். நான் சிறுகதை எழுதுவதற்கு பின் நின்றாலும் எமது ஆசிரியர்கள் என்னை கட்டாயப்படுத்தி எழுதிவித்தனர். இந்த வெற்றியில் எனக்கு மட்டுமன்றி எனது பாடசாலைக்கும் எனது பெற்றோருக்கும் முக்கிய பங்குள்ளது.

**4) நீர் மாணவர்களுக்கு கூறும் கருத்து என்ன?**

ஒவ்வொரு மாணவர்களும் சிறு வயதிலிருந்து வாசிப்பு பழக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும். மாணவர்கள் பாடசாலைப்போட்டிகளிலும், வெளிப்போட்டிகளிலும் பங்குப்பற்றி தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் வெற்றி தோல்வியை சமமாக மதிக்க வேண்டும். வாசிப்பு ஒரு மனிதனை முழு மனிதனாக்கும் என்பதை மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும்.

சந்திப்பு - புதிய நிலா குழுவினர்

" உமது சிறுகதைப் பயணம் மென்மேலும் வளர்ச்சியடைய எமது புதிய நிலா" சஞ்சிகை சார்பாக வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமையும் பேருவகையும் அடைகின்றோம்."

# புலமை நிலவு

## மாதிரி வினாத்தாள் 01

## பாகம் I

**கீழ்வரும் பாடலை வாசித்து 1 வது வினாவிற்கு விடையளிக்க**


*
ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப்பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ அப்பா"

01) உதிரம் என்பதன் ஒத்த சொல்
1) இரத்தம் 2) கண்ணீர் 3) நீர் 4) நெருப்பு

02) இப்பாடலில் வரும் திணையை குறிக்கும் சொல்
1) கண்ணீர் 2) சாதி 3) அப்பா 4) ஓடும்

*** அடுத்து வரும் வடிவத்தை இனங்கண்டு சரியான விடையின் கீழ் கீறிடுக.**


03)



*** அடுத்து வரும் சோடி எழுத்துக்களை இனங்கண்டு சரியான சோடி எழுத்துக்களை கீறிடுக.**

04) AZ, BY, CX______
1) DM 2) DW 3) BZ 4) CZ

05)





படத்தில் காட்டியபடி சதுரத்தட்டினுள் 1cm ஆரை கொண்ட வட்டத்தட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன. சதுரத்தட்டினுள் இன்னும் எத்தனை வட்டத்தட்டுக்கள் உங்களால் வைக்கமுடியும்?

1) 19 2) 20 3)21 4)24

✱ தவறான படத்தின் கீழ் கோடிடுக.

6)



A B C

7) தொலைக்காட்சி - கண் என்பது போல வானொலி


1) வாய் 2) மூக்கு 3) காது 4) கை

8) 6 ⇨ 9 என்பது போல 5 ⇨

1)  2) 2 3) 


✱ பின்வரும் எண்கோலத்தை கருத்திற் கொண்டு சரியான எண் சோடிகள் உள்ள விடையின் கீழ் கீறிடுக?

9)




1) 10,144 2) 9,269 3) 10,256

10)




எண்கோலத்தில் ? குறியீட்டில் வரவேண்டிய எண் எதுவென இனம் கண்டு சரியான விடையின் கீழ் கோடிடுக?

1) 7 , 2) 4 , 3) 7


11) TIME - 5736 என இரகசியக் குறியீடு காட்டப்படுமாயின் Boys க்கான இரகசியக்குறியீடு இலக்கம் காட்டும் விடையின் கீழ் கோடிடுக?


1) 5431 , 2) 4234 , 3) 9218


12) கண்ணன் ஒரு நிரையின் முன்பக்கமாகவும் பின்பக்கமாகவும் 17வதாக நிற்கின்றான் அப்படியாயின் நிரையில் உள்ள மாணவர்

1) 33 ,   2) 34 ,   3) 35

13) அன்புவினது வயதின் 2 மடங்கு வயது ராஜாவினதாகும் இருவரினது வயதுகளின் கூட்டுத் தொகை சரியாகக் காட்டும் வரிப்படம்.

1) 

2) 

3) 


14) சர்மி, சாமியா, ராம்ஜி மூவரினதும் பிறந்த மாதங்கள் திகதிகள் முறையே சித்திரை, மாசி, புரட்டாதி, ஆகும். திகதிகள் 30, 28, 31 ஆகும். இத்தகவலின் படி தவறான கூற்றைக் கொண்டவர்.

1) சர்மி   2) ராம்ஜி   3) சாமியா

15) 5m இடைவெளிகளில் வர்ணக்கொடி நாட்டப்படுகின்றன. மைதானத்தில் 250m நிளத்தில் எத்தனை கொடிகள் நாட்டப்படும்.


1) 50   2) 51,   3) 55   4) 62

16) நிறந் தீட்டப்பட்ட பகுதி முழு உருவத்தின் என்ன பின்னம்?



1) $\frac{5}{12}$   2) $\frac{3}{12}$   3) $\frac{2}{6}$

✱ கீழ் வரும் பழத்தொகுதிகளின் விலை அடிப்படையில் 17, 18,ம் வினாக்களிற்கு விடை அளிக்க

17) 

-------- ரூ38 ரூ36

1வது தொகுதிக்கான ,விலை கீழ்வரும் விடைகளில் இருந்து தெரிந்து கோடிடுக?

.................... ரூ38 ரூ36

1) 26 2) 28 3) 30 4) 35


18) 2 அப்பிள் பழத்தினதும் 2 மாம்பழத்தினதும் விலை யாது?

1) ரூ52 2) ரூ51 3) ரூ54 4) ரூ60

19) நீர்த்தொட்டி ஒன்றில் 50L நீர் உள்ளது 21 மாணவருக்கு 3L நீர் வீதம் கொடுக்க வேண்டுமாயின் இன்னும் தேவையான நீரின் அளவு யாது?

✱ 1 12l 500ml 2) 13000ml 3) 12l 900ml

கீழ்லுள்ள உருவங்களை அடிப்படையாக கொண்டு 20, 21ம் வினாகளுக்கு விடை தருக.



20) ஏதோனும் ஒரு இயல்புகளுக்கு ஏற்ப மூன்று பிரிவுகளால் பிரிப்பதனால் வரும் சரியான தொகுதி எதுவாக இருக்கும்?

| | | |
|---|---|---|
| 1) AB | 2) AB | 3) AE |
| BD | BC | BD |
| CD | CD | CE |

21) ஏதோனும் ஒரு இயல்புகளுக்கு ஏற்ப இரு கூட்டல்களாக பிரிப்பதனால் வரும் சரியான தொகுதி எது?

| | | |
|---|---|---|
| 1) ADE | 2) ABD | 3) ABC |
| BCE | CEF | DEF |

22) ஆதிவாசிகளை குறிக்கும் சொல்

1) சபரமுலிந்த 2) தமிழ் 3) யாக்பெல் 4) சிங்களம்

23) புத்த பெருமானின் தந்தம் வைக்கப்பட்ட மாவட்டம்.

1) அநுராதபுரம் 2) கண்டி 3) கொழும்பு 4) மாத்தளை

24) பதிவுத் தபால்ட்டையின் விலை

1) 5.00/= 2) 4.00/= 3) 30.00/= 4) 5.50/=

25) 8945 என்ற எண்ணில் இலக்கம் 9 இன் இடம் பெறுமானம்

1) ஒன்று 2) நூறு 3) பத்து 4) ஆயிரம்

26) தேவன் தனது நாட்டை மிகவும் அன்பாக நேசிப்பான் இதனை குறித்து நிற்கும் கூற்று.

1) ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
2) பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்ற வானிலும் நனிசிறந்தது
3) ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

27) கண்ணன் தனக்கு உதவி செய்பவரை என்றுமே மறவாது வாழ்வான் இதனை குறித்து நிற்பது

1) உப்பிட்ட வரை உள்ளளவும் நினை
2) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
3) இளமையில் கல்வி சிலையில் எழுத்து

28) தகரம் இச்சொல்லில் “த” குறிக்கும் ஒலி

1) மாற்றொலி
2) இயல்பொலி
3) குற்றொலி
4) நெட்டொலி

| | | |
|---|---|---|
| ✱ உள்ளக விளையாட்டு - 6<br>வெளியகவிளையாட்டு - 12 | காற்பந்து<br>கரப்பந்து<br>எல்லே | கரம்<br>பூம்பந்து |


29) எத்தனை விளையாட்டுக்கள் நடைபெற்றன.

1) 7
2) 25
3) 18
4) 16

30) உள்ளக விளையாட்டுக்களாக நடைபெற்றவை

1) 8
2) 2
3) 6

31)




வீட்டுக்கு எத்திசையில் தபாற் கந்தோர் உள்ளது

1) வடகிழக்கு 2) தென்மேற்கு
3) தென்கிழக்கு 4) மேற்கு

32) வீட்டிலிருந்து வைத்தியசாலைக்கு சென்று வர எடுத்த தூரம் யாது?

1) 100m 2) 180m 3) 150m 4) 300m

33) வைத்தியசாலைக்கு மேற்காக 150m தூரத்தில் உள்ள கோவிலை மேற்படி உருவில் வரைந்து காட்டுக?

✱ தடித்த எழுத்தில் குறிக்கப்படுபவர் யாராக இருக்கலாம் என்பதை சரியாக கோடிடுக.

34) நாட்டு மக்களுக்கு **ஜனாதிபதி** உரையாற்றினார்?

A) மகிந்தராஜபக்ஷ B) ரணில் விக்ரமசிங்க
C) டி.சில்வா D) C.WW கன்னங்கரா

35) இலவசக்கல்வியின் **தந்தை** என போற்றப்படுபவர்

A) ஆனந்த சமரக் கோன் B) C.W.W கன்னங்கரா
C) டி.எஸ். சேனநாயக்க C) சந்திரிக்கா

✱பிழையான கருத்தை தரும் வாக்கியத்தை கண்டுபிடிக்கவும்


36) A) சூரியன் காலையில் கிழக்கு வானில் தோன்றுகிறான்
B) சந்திரன் அமாவாசை தினத்தன்று முழு நிலவாக தெரிகிறது
C) சூரிய கிரகணத்தில் ஏழு நிறங்கள் உண்டு

37) A) பல்லி இனம் பூச்சிகளை உண்டு வாழுகிறது
B) அணிலின் வால் அது மரங்களிலிருந்து மரங்கள் தாவுவதற்கு உதவுகிறது
C) பாம்புகள் குட்டி ஈன்று பால் கொடுக்கிறது

✱ எப்பொழுதும் உண்மையான கூற்றாக அமைவது


38) A) - மனிதர்கள் இறப்பது ஒரு தடைவைதான்
B) - சித்தர்கள் உயிர் வாழ்வது ஆயிரம் வருடங்கள்
C) - மழை புரட்டாதி மாதம் தினமும் பெய்யும்

39)



1) எத்தனை முக்கோணங்கள் உண்டு?

40)




1) ஊதா நிறம் வரும் சந்தர்ப்பத்தை காட்டும் எழுத்து.
   1) A   2) B   3) C   4) F

2) நீல நிறத்தை மட்டும் காட்டும் எழுத்து.
   1) F   2) G   3) D   4) B

தொகுப்பாக்கம்

**திருமதி சுசிலா கமலதாஸ்**

**வதிரி திரு இருதய கல்லூரி**

பகுதி இரண்டின் வினாதாளும் பகுதி ஒன்றிற்குரிய விடைகளும் எமது அடுத்த இதழில் வெளி வரும் என்பதனை தெரிவிப்பதுடன் எமது இச்சேவை தொடர்பான உங்களுடைய கருத்துக்களை உவகையுடன் எதிர்பார்க்கிறோம்.

# வழிகாட்டல் விருத்தி

## விஞ்ஞானம் ஏன் எமக்கு கடினமாகிறது

தற்போதைய க.பொ.த சாதாரணதரத்தில் விஞ்ஞானம் பாடம் ஓரளவு கடினத்தன்மையயுடையதாக இருப்பதோடு பரீட்சை பெறுபேறுகளில் மாணவர்களின் பெறுபேறு தீர்வு முழுவதுமே எதிர்பார்த்த மட்டத்தை அடையாத நிலையில் உள்ளதக் காணக் கூடிதாக உள்ளது.

மாணவர்களுக்கு பல்வேறு மட்டங்களில் இருந்து வினாப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. மாணவர்களும் அவற்றை செய்து பார்த்து தம்மைப் தயார் படுத்துகின்றார்கள். அனேக மாணவர்கள் கேள்விக்கேற்ற விடைகளை மனனம் செய்து ஒப்புவிக்கும் மனப்பாங்கில் செயற்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

உண்மையில் மாணவர்கள் தமது பரீட்சைக்கு தேவையில்லாத விடயங்கள் பலவற்றை விஞ்ஞானம் படிக்கின்றோம் என்ற போர்வையில் மனனம் செய்து அதனால் அந்த பாடத்தில் வெறுப்பும் எய்த முடியாத இலக்கினை நோக்கி செல்லுகிறோமோ? என்ன நினைப்பில் விஞ்ஞான பாடம் கற்பதை முன்னிலைப் படுத்த விரும்பாததே விஞ்ஞான பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கான காரணிகளின் முதன்மையானது.

உண்மையில் எமது விஞ்ஞான பாடத்திட்டத்தில் அடையப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகள் எல்லாம் எம்மையும் எம்மைச்சூற்றிய விடயங்களே.

விஞ்ஞான பாடத்தில் காணப்படும் அடிப்படை எண்ணக்கருக்கள் மாணவரிடத்தே தோற்றம் பெறுகையில் ஏற்படும் நலிவான தன்மையே விஞ்ஞானம் அடிப்படையில் கடினமானதாக

மாறுவதற்கு காரணமகின்றது.

விஞ்ஞானத்தில் சிறந்த பெறுபேற்றை பெறவேண்டும் என நினைக்கும் அனைவருமே கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விடயம் அடிப்படை எண்ணக்கருக்கள் மாணவர் மாணவரிடத்தே சரியான முறையில் ஏற்படுத்த படுகின்றதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அடிப்படை எண்ணக்கருக்களை சரியான விதத்தில் மாணவர்கள் விளக்கி கொள்வதோடு அவர்களது ஆசிரியர்களும் எண்ணக்கருக்கள் சரியாக தோற்றம் பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

சாதாரணமாக ஒருவித்திலைத் தாவரம் இருவித்திலைத் தாவரம் என்பதை சரியான மனதில் உருவாக்கி கொள்ளாமல் அவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை மாணவர்கள் மனனம் செய்வதை அவதானிக்க முடிகின்றது.

ஒரு வித்திலை இருவித்திலை தாவரங்கள் பற்றிய சரியான எண்ணக்கரு மாணவர் மனதில் இருந்தால் அவர்கள் அவற்றிற்கு இடையிலான 4/5 வேறுபாடுகளை கடினப்பட்டு மனைம் செய்ய வேண்டிய தேவையில்லை. ஏனெனில் தாவரங்களின் ஒவ்வொரு பகுதியையும் மதைில் நிறுத்தி அவற்றின் வேறுபாடுகள் இலகுவாக நினைவுக்கும் கொண்டு வரலாம் நாம் தினமும் ஒரு வித்திலை, இரு வித்திலை தாவரங்களை காண்கின்றோம் அல்லவா.

இது ஒரு சிறு உதாரணமே நான் இங்கு குறிப்பிட்டது. இவ்வாறு நிறைய சொல்லலாம். அடிப்படை எண்ணக்கருக்களை சரியாக உள்ளத்தில் உருவாக்கி கொள்வதற்கு. ஒவ்வோர் விஞ்ஞான அடிப்படை எண்ணக் கருக்களையும் சரியாக உருவாக்குவதன் மூலம் விஞ்ஞானம் எமக்கு கடினமாக இருப்பதை களைவதோடு சிறந்த பெறுபேறுகளை பெறலாம்.

**மகேந்திரராஜா**
**அதிபர்**
**சிறுப்பிட்டி அ.த.க.வி**

# A/L உயிரியல் பற்றிய ஒரு நோக்கு

உயிரியல் கற்றற்குரிய ஒரு விடயமன்று ஒருவரின் வாழ்க்கை முழுவதிலும் கலந்திருப்பதும் நடைமுறையில் பயன்படுத்துவதுமாகிய சிறந்த அனுபவமாகும். 2009ம் ஆண்டு முதல் க.பொ.த உயர்தர பாடத்திட்டத்தில் உயிரியல் பாடத்தில் நடைமுறையில் வந்துள்ள பாடத்திட்டமாற்றமானது வெறுமென உயர்தரப்பரீட்சையை மட்டும் நோக்காகக் கொண்டு அல்லாது வாழ்க்கைக்கும் தொழில் உலகிற்கும் தேவையான பல்வேறு தேர்ச்சிகளை விருத்தி செய்யும் பொருட்டு அமைந்துள்ளது. தற்போது ஆசிரியரை முதன்மைப்படுத்திய கற்பித்தலுக்குப் பதிலாக ஆசிரியரின் வழிகாட்டலுடன் மாணவர்கள் ஈடுபடும் ஒரு கற்றலாக இதனைக் குறிப்பிடமுடியும். ஆயினும் கடந்த சில வருடங்களுள் உயிரியல் துறை மிக மிக முன்னேற்ற மடைந்துள்ளது என்பது யாவரும் அறிவர். அம் முன்னேற்றத்திற்கு அமைவாக நாமும் புத்தம் புதிய அறிவு படைத்தவர்களாக இணைந்து செயற்படவேண்டியுள்ளது. எனவே க.பொ.த உயர்தர வகுப்பிற்கு உயிரியலை ஒரு பாடமாக கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் உயிரியல் அறிவினை மட்டுப்படுத்தாது அத்துறையில் அதிக ஆர்வத்தினையும் விருப்தினையும் ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் மாணவருக்கு வாழ்க்கை தொடர்பான பல அனுபவங்கள் கிடைக்கும் என்பதை உணரச் செய்தல் வேண்டும்.

S. நித்தியானந்தன்
உயிரியல் ஆசிரியர்
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

# தமிழறிவு வினா விடைகள் தொடர் - 04

1) நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி இதில் நாலு என்பது எதனைக் குறிக்கிறது?
    நாலடியார்

2) கம்பரை ஆதரித்த வள்ளல் யார்?
    சடையப்பவள்ளல்

3) பதிகம் பாடும் முறையை தமிழில் தொடக்கி வைத்தவர் யார்?
    காரைக்கால் அம்மையார்

4) நன்னூலை இயற்றியவர் யார்?
    பவணந்தி முனிவர்

5) கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் யார்?
    குலோத்துங்கசோழன்

6) காதலியாற்றுப்படை பாடியவர் யார்?
    க.கணபதிப்பிள்ளை

7) வெண்பாவால் சிறப்பு பெற்ற புலவன் யார்?
    புகழேந்திபுலவர்

8) யேசு காவியம் இயற்றிய கவிஞர் யார்?
    கண்ணதாசன்.

9) தமிழில் தோன்றிய முதற்பரணி இலக்கியத்தை இயற்றியவர் யார்?
    சயங்கொண்டார்.

10) "யாதுமூரே யாவருங் கேளிர்" எனப் பாடிய சங்கப்புலவர் யார்?
    கணியன் பூங்குன்றனார்.

11) ஒரு செய்யுளின் முடிவை அடுத்த செய்யுளின் தொடக்கமாய் அமைத்துப் பாடும் முறை யாது?
அந்தாதி

12) "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" எனத் தனது கல்லறையில் பொறிக்குமாறு கூறிய அறிஞர் யார்?
அறிஞர் ஜி.யு பொப்

13) வசன நடையில் கைவந்த வல்லாளர் எனப்போற்றப்படுபவர் யார்?
ஆறுமுகநாவலர்

14) இலங்கையில் வெளிவந்த முதற் பத்திரிகை எது?
உதயதாரகை

15) தொல்காப்பியம் எத்தனை இயல்களை கொண்டது?
9

16) தமிழில் எத்தனை எழுத்துக்கள் சீர்திருத்தப்பட்டன?
13

17) கம்பவாரிதி எனப்பட்ட ஈழத்துப் பேச்சாளர் யார்?
ஜெயராஜ்

18) நந்திக் கலம்பகம் எந்தக்காலத்தில் எழுந்தது?
பல்லவர் காலம்

19) பிரபந்தங்கள் எத்தனை வகைப்படும்?
96

20) வீடற்றவன், வாழ்வற்ற வாழ்வு இவற்றின் நூலாசிரியர் யார்?
சி.வி. வேலுப்பிள்ளை

**(அறிவு வளரும்)**

தொகுப்பாக்கம்

எமது ஆசிரியர் குழு

உ

# பொது அறிவுப் போட்டி தொடர் 01

1) உலகிலே முதன் முதலாக பிரதரமாக பதவியேற்ற நபர்?

2) உறுப்பு மாற்ற அறுவை சிகிச்சை மூலம் முதல் முதலில் பொருத்தப்பட்ட உடல் உறுப்பு எது?

3) உலகிலே முதல் முதல் மூச்சுக்குழாய் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்ட நாடு எது?

4) எந்த வகையான பாறை (Marble) ஆக உருவாகிறது?

5) காமன் வெல்த் தினம் எந்நாளில் கொண்டாடப்படுகிறது?

6) முதல் பொது நூலகம் அமைக்கப்பட்ட நாடு எது?

7) TEMPLE OF HEAVEN எங்கே உள்ளது?

8) எழும்புகளைப் பற்றி ஆய்வு செய்வது?

9) இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களை பற்றி ஆய்வு செய்வது?

10) ஏடோஷா தேசிய வனவிலங்கியல் பூங்கா எங்கே உள்ளது?

11) அன்னை தெரோசாவிற்கு 1972ஆம் ஆண்டு கிடைத்த விருது யாது?

12) கருவில் முதன் முதலில் உண்டாகும் உறுப்பு யாது?

13) 2010 மார்ச்சில் நேபாளத்தில் காலமான பிரபல அரசியல்வாதி?

14) இலங்கையில் அண்மையில் காலமான பிரபல சிறுகதை கலைஞர்?

15) 2010 ஜீலையில் டெஸ்ட் கிரிக்கட் போட்டியில் விக்கட் சார்பான உலக சாதனையை நிகழ்த்தியவர்?

16) இலங்கையின் மிக நீண்ட பாலம்?

17) 2010 ஓகஸ்டில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சார்க் நாடு?

18) 2004 - 2006 ஆம் ஆண்டுகளில் உலகின் அதி சிறந்த மேசைப்பந்தாட்ட வீரராகத்திகழ்ந்தவர் யார்?

19) முதல் உலகக் கால்ப்பந்து போட்டி எங்கே நடைபெற்றது?

20) பி.பி.சி மாதிரி கம்பியூட்டர் எத்தனையாம் ஆண்டு வெளியிடப்பட்டது?

தொகுப்பாகம்
புதிய நிலா குழுவினர்

*மேற்குறிப்பிட்ட பொது அறிவு வினாகளிற்கு சரியான விடைகளை எழுதி பெயர், பாடசாலை, தரம், முகவரி என்பவற்றை தொளிவான கையொழுத்தில் குறிப்பிட்டு 10-10-2010 குள் எமக்கு அனுப்பி வைக்கவும்*


*பொது அறிவு போட்டி இலக்கம் - 01*

*கு. அஜித்குமார்*
*நிர்மலைஸ்தான்*
*நல்லா தோலை*
*வதிரி கரவெட்டி*

# தகவல் தொழிநுட்பம் - போட்டி தொடர் - 01


01) 


02) 

03) 

04) 


05) 

06) 

07) 

08) 

09) 

10) 

மேற்குறிப்பிட்ட இலத்திரனியல் உபகரணங்களை இனங்கண்டு அவற்றின் பெயர்களைத் தெளிவான கையெழுத்தில் எழுதி. பெயர், முகவரி . பாடசாலை, தரம். என்பவற்றை குறிப்பிட்டு அதிபர் அல்லது வகுப்பாசிரியர் உறுதிப்படுத்தலுடன் 10-10-2010 ற்குள் எமக்கு அனுப்பி வைக்கவும்.

தகவல் தொழிநுட்ப போட்டி இல - 01

கு. அஜித்குமார்
நிர்மலஸ்தான்
நல்லா தோலை
வதிரி கரவெட்டி

புதிய நிலா நிலைக்க வாழ்த்துகிறோம்







# ஸ்ரீ சாயி ஸ்ரூடியோ

பிறந்த நாள் நிகழ்வுகள் திருமணவைபவங்கள் பூப்புனித
நீராட்டு விழாக்கள் மற்றும் அனைத்து வைபவங்களுக்கும்
வீடியோ புகைப்படம் பிடித்தி டிஜிற்ரல்அல்பம் தயாரித்திட
கணணி முறையில் வீடியோ மிக்சிங் செய்திட
பழையபுகைப் படங்களை சீரமைத்திட நாடுங்கள்.





நவிண்டில் வீதி, கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.




இச் சஞ்சிகை புதிய நிலா வெளியீட்டகத்தால் 20.09.2010 அன்று
லெட்சுமி ஓ(F)வ் செற் பிரிண்டர்ஸ் நிறுவனத்தால் அச்சிட்டு வெளியிடப்பட்டது